பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்14வள் ளுவர் ஆண்டு2030வைகாசி30 ஞாயிற்றுக்கிழமை [13-06-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 170

### அஷ்ரப்புக்கு எதிரான

## ஆர்ப்பாட்டக்காரர்களை கலைக்க பொலீஸார் சூடு!

### தென் கிழக்கு மாகாண சபைக்கு எதிர்ப்பு

மட்டக்களப்பு, ஜூன் 13

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் புனர்வாழ்வு, புனரமைப்பு, கப்பல் துறை முகங்கள் அமைச்சருமான எம். எச். எம். அஷ்ரப்புக்கு எதிராகக் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தக் கூடியிருந்த மக்களை விரட்டுவதற்காகப் பொலீஸார் எச்சரிக்கை வேட்டுக்களை தீர்த்ததுடன் கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் செய்தனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:–

காத்தான்குடிப் பிரதேச சபையை நகர சபையாகத் தரமுயர்த்தும் வைபவத்தில் கலந்து கொள்வதற்காக காத்தான்குடிக்கு நேற்று அமைச்சர் அஷ்ரப் விஜயம் செய்தார்.

இந்த வைபவத்தில் கலந்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணி விசாரணைக்கு புதிய மேலதிக நீதிவான்

### அருள்சாகரன் லண்டனில்

கொழும்பு, ஜூன் 13

செம்மணிப் புதைகுழி விவகாரம் தொடர்பான வழக்கை விசாரிப்பதற்கென விசேடமாக யாழ். மேலதிக நீதிவானாக நியமிக்கப்பட்ட என். அருள் சாகரனின் இடத்துக்கு புதிய நீதிவான் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என இரகசியப் பொலீஸ் பிரிவின் பணிப்பாளர் கீர்த்தி கஜநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

செம்மணிப் புதைகுழிகள் தோண்டுவது தொடர்பான வழக்கு இம்மாதம் 16 ஆம் திகதி யாழ். நீதிமன்றத்தில் எடுக்கப்படும் போது தற்போது நியமிக்கப்பட்டுள்ள நீதிவான் நீதிமன்றுக்குச் சமுகமளிப்பார் எனவும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

# விடத்தல்தீவு வரையுள்ள பகுதியை கைப்பற்றியதாக அரசு அறிவிப்பு!

## போர்க்கோஷம் - 4 நேற்றுடன் பூர்த்தியாம்

கொழும்பு, ஜூன் 13

கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட "போர்க் கோஷம் – 4" இராணுவ நடவடிக்கை மூலம் உயிலங்குளத்துக்கு வடக்காகவும், மன்னார்–பூநகரி வீதி வழியாகவும், விடத்தல்தீவு வரையுமான 358 சதுர கிலோ மீற்றர் பிரதேசங்களை கைப்பற்றி இருப்பதாக பாதுகாப்பு நடவடிக்கை தலைமைச் செயலகம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"போர்க்கோஷம் 4" நடவடிக்கை மூலம் மன்னார் பிரதேச செயலர் பிரிவில் 10 கிராம சேவையாளர் பிரிவுகளும், மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 8 கிராமசேவையாளர் பிரிவுகளும் மடு பிரதேச செயலர் பிரிவில் 10 கிராமசேவை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## உயிலங்குளம் ஊடாக பொதுமக்கள் வந்தனர்

வவுனியா, ஜூன் 13

''போர்க் கோஷம்'' இராணுவ நடவடிக்கை இடம்பெற்ற போதிலும் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியிலிருந்து சுமார் 200 பொது மக்கள் நேற்று உயிலங்குளம் ஊடாக மன்னார், வவுனியா ஆகிய இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் வர இராணுவத்தினர் அனுமதித்தனர்.

அதே சமயம் விடத்தல்தீவு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மலையகத்தில் கடும் மழை

மலையகத்தில் சகல பகுதிகளிலும் நேற்று ஐந்தாவது நாளாக கடும்மழை பெய்தது.

தொடர்ந்து பெய்த மழையினால் பல இடங்களில் நீர் நிலைகள் தேங்கி வழிவதனால் தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனால் குடிதண்ணீரை சூடாக்கிப் பருகுமாறு பொது மக்களுக்கு சுகாதாரப் பகுதியினர் ஆலோசனை வழங்கியுள்ளனர். (இ–5–7)

## மன்னாரில் பிரஜைகள் குழு

மன்னார் மாவட்டத்தில் பிரஜைகள்குழு ஒன்று நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

மதத்தலைவர்கள், கல்விமான்கள் மற்றும் வர்த்தகர்கள் அடங்கலாக இந்த பிரஜைகள் குழு அமைக்கப்பட்டுள்ளது. (இ–7)

## தொழிற் சங்க நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 13

தமது கோரிக்கை நிறைவேறாதுபோனால் நாளை திங்கள் தொடக்கம் தொழிற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தென் மாகாண முதல்வர் அடுத்த வாரம் பதவி ஏற்பு

தென்மாகாண சபையின் புதிய முதலமைச்சர் அடுத்த வாரம் பதவிப் பிரமாணம் செய்து கொள்வார். அமைச்சர்கள் நியமனமும் அடுத்த வாரம் இடம்பெறும்.

இதே வேளை தென் மாகாணசபைக்கு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களின் பெயர்ப்பட்டியல் நாளை திங்கட்கிழமை வர்த்தமானியில் வெளியிடப்படும் என்று கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (இ–5)

## ஆணைக்குழு அதிகாரிகள் பலாலி முகாமுக்கு விஜயம்

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.சிறீதரன், யாழ். அதிகாரி செல்வி கௌரி சுந்தரலிங்கம் ஆகியோர் நேற்று பலாலி இராணுவ முகாமுக்கு விஜயம்செய்தனர்.

பலாலியில் வட பிராந்திய படைத் தளபதி மேஜர் ஜெனரல் லொகான் குணவர்த்தனவைச் சந்தித்து செம்மணி விவகாரம் மற்றும் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் பற்றி இவர்கள் விரிவான பேச்சு நடத்தினார்கள்.

இந்தச் சந்திப்பின் பின்னர் நெல்லியடி பொலீஸ் நிலையத்துக்கு விஜயம் செய்த மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் நெல்லியடி பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரியைச் சந்தித்து பேச்சு நடத்தினார்கள். (இ-5)

## பொலீஸ் அதிகாரி லஞ்சம் வாங்கினாராம்

கொழும்பு, ஜூன் 13

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் இருந்து கொழும்பு செல்வதற்காக வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவரிடம் இருந்து ரூபா 11 ஆயிரத்து 500 பெறுமதியான தங்கச் சங்கிலியை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டார் என்ற குற்றச் சாட்டின் பேரில் மன்னார் பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கடமையில் இருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:–

கிளிநொச்சி—சிவபுரம் பகுதியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவரும், அவரது மகளும் கொழும்பு செல்வ

(10 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவைச் சங்க வவுனியா கிளை ஊழியர்கள் படையினரால் விசாரணை

### நிர்வாக உத்தியோகத்தர் ஒருவர் கைது

வவுனியா, ஜூன் 13

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியாக் கிளையைச் சேர்ந்த சகல ஊழியர்களும் நேற்றுமுன்தினம் படையினரால் தீவிரவிசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

திடீரென மேற்படி சங்க அலுவலகத்துக்குவந்த பொலீஸார் ஊழியர்கள் அனைவரையும் வெளியே வருமாறு அழைத்து தீவிரசோதனைக்கு உள்ளாக்கியதோடு தனித் தனியே விசாரணை செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியாக் கிளையின் நிர்வாக உத்தியோகத்தர் றொனால்ட் ஸ்ரீகாந்தன் (வயது 27) நேற்று முன்தினம் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தனது அலுவலகத்தில் இருந்து குருமண்காட்டுப் பகுதியூடாகச் சென்றுகொண்டிருந்தபோது இடையில் வழி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரின் நகைக் கடை நீர்கொழும்பில் கொள்ளை!

கொழும்பு, ஜூன் 13

நீர்கொழும்பு நகரப் பகுதியில் தமிழருக்குச் சொந்தமான நகைக் கடை ஒன்று நேற்றுமுன்தினம் இரவு இனந் தெரியாத நபர்களினால் கொள்ளையிடப்பட்டது.

மேற்படி கடைக்குள் இருந்த சுமார் 50 பவுண் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ–7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா பரஞ்சோதி

(Former Field Officer — Ceylon Tobacco Company)

கொல்லங்கலட்டி கப்பங்கினியைப் பிறப்பிடமாகவும், வயாவிளான் தெற்கை வசிப்பிடமாகவும் ஈற்றில் உரும்பிராயில் வசித்தவருமாகிய கந்தையா பரஞ்சோதி 11 – 06 – 99 அன்று காலமானார். இவர் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும் வயாவிளானைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கனகரட்னம் அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் ஆச்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், திருமதி ச. அனுசியா (முன்னாள் எழுது வினைஞர், யாழ். கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்), ஜெயசீலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சசிகரனின் (பிரான்ஸ்) மாமனாரும், திருமதி வி. நாகேஸ்வரி, திருமதி ப. பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான திருமதி நா. மகேஸ்வரி, க. பரமசிவம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான க. திருநாவுக்கரசு, க. பத்மநாதன் மற்றும் திருமதி சே. தங்கப்பிள்ளை, க. பரமசிவம், க. பரஞ்சோதி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13–06–99 காலை 10.00 மணிக்கு உரும்பிராயில் நடைபெறும், இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
ப. ஜெயசீலன்,
(மகன்)

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

(66575)

## மாணிக்கம் மகேந்திரராசா

[ முன்னாள் இ.போ.ச. கணக்காளர் கோண்டாவில் ]

கந்தர்மடத்தை வசிப்பிடமாகக் கொண்ட மாணிக்கம் மகேந்திரராசா 12 — 06 — 99 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், தனலட்சுமியின் [குஞ்சு—யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை] அன்புக் கணவரும், சுகிர்தா [ ஜேர்மனி ], விஜிதா, மனோஜ்குமார் [கனடா], பிரேமிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தரூபன் [ஜேர்மனி], இராஜா ஆகியோரின் மாமனாரும், சுஜந்தாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [13-06–99] ஞாயிறு காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

109, அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி
[66577]

## துரைராஜா தேவராஜா

(தபால் ஊழியர், அஞ்சல் அலுவலகம், சங்கானை)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா தேவராஜா 12–06–99 இல் காலமானார்.

அன்னார் காலம் சென்றவர்களான துரைராஜா இரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் காலம் சென்றவர்களான தியாகராஜா தையல்நாயகி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் சுகாஜினி, சுஜந்தினி, சுதர்சன் ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-06-99) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணி அளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கராச்சி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி இராஜேஸ்வரி
(மனைவி)

தேவாலய வீதி,
சங்கானை.

[66585]

## அரியகுட்டி பொன்னுத்துரை

(ஊரெழு மேற்கு)

ஊரெழுமேற்கைச் சேர்ந்த அரியகுட்டி பொன்னுத்துரை 10– 06- 99 இல் காலமானார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும் சின்னத்தங்கச்சி காலஞ்சென்றவர்களாகிய அருணாசலம் செல்லத்துரை, தங்கச்சியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் சிவசோதி, ஜெகசோதி, தவசோதி, கதிர்காமநாதன் வரதநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் தகப்பனாரும் செல்லத்துரை, சிவசோதி (யாழ். போதனா வைத்தியசாலை), வசந்தி (ஜேர்மனி), கனகம்மா ஆகியோரின் அன்பு மாமனாரும் பிருந்தினி, பாபு சசி, ஜெகன், புருஸ்கரன், சுஜேன், சஞ்ஜேன், மதிபன், மருபன், மகிந்தா, வேந்தன், விவேகன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதித் கிரியைகள் இன்று (13–6-99) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பொக்கணை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தாய்

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்

(66587)

## நினைவுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி மாவட்ட ஒன்றியத்தின் சார்பில் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் துரைராசாவின் நினைவுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

இரத்ததான நிகழ்வும் இடம்பெறும். (இ–103)

## பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் அ. துரைராசாவின் 5 ஆம் ஆண்டு ஞாபகார்த்த நினைவு தினத்தை முன்னிட்டு கைதடி கல்விக் கழகம் நடத்திய பொது அறிவுப் போட்டியின் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 4 மணிக்கு கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறும். (இ-7–17)

2 -ம் அகவையை நோக்கி...
I. B. S.
சுண்டுக்குளி.
Yr. 1 – A/Lவரை
Gr. 5 புலமைப்பரிசில்
O/L
Paper Classes
(66591)

A/L 2001 MATHS
பிரிவு II ஆரம்பத்திலிருந்து
( காலை 6.15 )
Gr.6 தொடக்கம் O Lவரை
சமூகக்கல்வி
Mr. நித்தியானந்தன் B. A.
Miss. இராஜேஸ்கனி B. A.
SHAMROCK
(சி/7878)

லிபேட்டி
தியேட்டர்
அச்சுவேலி
சாயிகுமார் – விஜயசாந்தி
நடித்த
தளபதி கோட்டை
காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரப்படி)
Fax No. 070– 212223
FOREIGN T. P. NO-
0094 - 70 – 212223
(66328)

நாகம்ஸ்
சுன்னாகம்
15 - 06 - 99 வரை
அர்ஜூன், ரஞ்சிதா,
கவுண்டமணி, செந்தில்
நடித்த
ஜெய்ஹிந்த்
காட்சிகள் 11.00, 2.30
[ புதிய நேரம் ]
[ 66581 ]

ராஜா
யாழ்ப்பாணம்
விஜய், தேவயாணி,
ரம்பா, மணிவண்ணன்,
செந்தில்
மற்றும் பலர் நடித்த
நினைத்தேன்
வந்தாய்
10.30, 2.00, 5.00
[ சி/7863 ]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நித்தியானந்தன் சரஸ்வதி

கரவெட்டி மத்தியில் வசிக்கும் வல்லிபுரம் நித்தியானந்தனின் மனைவி திருமதி சரஸ்வதி அவர்கள் 12–6–99 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இல்லத்தில் இறுதிக் கிரியைகள் இன்று (13-6–99) ஞாயிற்றுக்கிழமை காலை 10–00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சேனப்புமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. நித்தியானந்தன் (கணவன்)
நி. பாபு (மகன்)
சிவா (மருமகன்)

கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(சி/7879)

## சிவக்கொழுந்து இராசம்மா

குப்பிளானைச் சேர்ந்த சிவக்கொழுந்து இராசம்மா நேற்று சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் மனைவியும், இராசதுரை (கொழும்பு), தெட்சணாமூர்த்தி (கிராம உத்தியோகத்தர், வலி. வடக்கு பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இராசலட்சுமியின் மாமியாரும், கிருஷ்ணாஜினி (வேம்படி மகளிர் கல்லூரி), வருணா (திருக்குடும்ப கன்னியர் மடம் ஆங்கில பாடசாலை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12–06–99) குப்பிளான் கிராம மயானத்தில் நடைபெற்றன.

தகவல்
இ. சி. தெட்சணாமூர்த்தி,
(மகன்)

குப்பிளான்..

(66568)

## சோதிநாதன் சோதிநாத்

உரும்பிராயைச் சேர்ந்த சோதிநாதன் சோதிநாத் அவர்கள் 11–6–99 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோதிநாதன் புஸ்பதேவி தம்பதிகளின் அன்பு மகனும் சோபியா, சோபிநாத், ரமேஷ் (லண்டன்), பிரிதா (சுவிஸ்), ரவீந்திரன் (சுவிஸ்), ஷர்மிலன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் குலசேகரம், சந்திரசேகரம், தர்மராஜா, ஜெகநாதன் (கனடா), இராசம்மா, றோசம்மா, சறோ, ஜெயா, லதா ஆகியோரின் பெறாமகனும் வதனி (கனடா), சாந்தினி (கனடா), குமுதினி (இந்தியா), ரஞ்சினி, செல்லையா, தம்பிராஜா, பொன்னையா, அருணகிரிநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கந்தசாமி, இரத்தினம் தம்பதிகள், காலஞ்சென்ற நன்னியன், இலட்சுமி தம்பதிகளின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13–6-99) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
க. குலசேகரம்
(பெரிய தகப்பன்)

உரும்பிராய்.

(66584)

## அருமைத்துரை சுதாகரன்

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த அருமைத்துரை சுதாகரன் 20—04—1999 அன்று சிலோவாக்கில் காலமானார்.

இவர் அருமைத்துரை – பாக்கியலட்சுமி தம்பதிகளின்ஏகபுதல்வனும், சாந்தமலரின்(ஆசிரியைஇணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை), அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்லத்துரை–கண்மணி (பிரான்ஸ்), தியாகராசா (உரிமையாளர் காமாட்சி கூல்பார், திருநெல்வேலி), ஜெகசோதி, நடராசா (பிரான்ஸ்) – சுந்தரேஸ்வரி, ஆனந்தராசா (கணக்காளர், லண்டன்), ஜீவகுமாரி (கணக்காளர் - லண்டன்), இராஜேந்திரம் புனிதவதி, மகேந்திரம் – ஆயிலியம் ஆகியோரின் அன்பு மருமகனும், சின்னத்துரை (நல்லூர், ப. நோ. கூ. சங்கம்), சரஸ்வதி, யோகேந்திரம் – மனோரஞ்சிதம், சிவகுமாரன் (நிர்மாணத் திணைக்களம், யாழ்ப்பாணம்), ரதிதேவி (ஆசிரியை, இணுவில் இந்துக் கல்லூரி), இரத்தினம்பிள்ளை-இராசலட்சுமி, இராமநாதன் (சுவிஸ்), பவானி (புத்தளம்) ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை நல்லம்மா, காலஞ்சென்ற சதாசிவம் – அன்னம்மா (இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலடி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 13–06–99 ஞாயிற்றுக்கிழமை காலை 10. 00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ. அருமைத்துரை
(தகப்பன்)
க. தியாகராசா
(மாமன்)
(ஸ்ரீ காமாட்சி கூல்பார், திருநெல்வேலி)

முத்தட்டிமடம்,
K. K. .S வீதி.

(66588)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## திருந்துமா?

தென் மாகாண சபைத் தேர்தலில் ஆளுங்கட்சியான பொது மக்கள் ஐக்கிய முன்னணி மற்றைய இரண்டு கட்சிகளையும் விட அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது— அதிக வாக்குகளை— பெற்றிருக்கிறது. ஆனால் அறுதிப் பெரும்பான்மை பெறக்கூடிய அளவுக்கு ஆளுங்கட்சிக்கு அங்கு ஆதரவு இருக்கவில்லை.

இரண்டு மாதங்களுக்கு முன்னர்—ஏப்ரல் மாதத்தில்—ஐந்து மாகாண சபைகளுக்கு நடந்த தேர்தலின் போதும் நான்கு மாகாணங்களில் அரசினால் அறுதிப் பெரும்பான்மைப் பலம் பெறமுடியவில்லை.

விமர்சகர்களால் மட்டுமன்றி அரசாங்கப் பிரமுகர்களினாலேயே தென் மாகாணசபைத் தேர்தல் முக்கியமான ஒன்றாகக் கருதப்பட்டது. காரணம் இதற்குப் பின்னர் — இத்தேர்தலை அடுத்து— ஒன்றில் பொதுத் தேர்தல் அல்லது ஜனாதிபதித் தேர்தல் சில மாதங்களில் நடைபெறுவது நிச்சயம் என்பதாலாகும்.

தென்மாகாண சபைத் தேர்தல், அரசுக்குச் சாதகமான— அடுத்து வரும் தேர்தலில் அதற்கு வெற்றி கிடைக்கும் — சமிக்ஞையைக் காட்டும் என்று ஆளுங்கட்சியினர் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

ஆனால், வியாழக்கிழமைத் தேர்தல் முடிவு அந்த நம்பிக்கை தப்பானது என்பதனையே எடுத்துச் சொல்லி உள்ளது. 1994 ஆம் ஆண்டு தென் மாகாண சபைத் தேர்தலில் ஆளும் பொ. ம. ஐ. முன்னணிக்குக் கிடைத்த வாக்குகளுடன் ஒப்பிடும்போது, இம் முறை 27.5 சத விதம் வீழ்ச்சி கண்டுள்ளது.

அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து தென்மாகாண மக்கள் அதிருப்தி அடைந்துள்ளார்கள்; அதன் மீதான நம்பிக்கையை இழந்துவிட்டனர். என்பதனை தேர்தல் முடிவு கோடிட்டுக் காட்டுகிறது.

இதற்கு முந்திய மாகாண சபைத்தேர்தல்களில் இனப்பிரச்சினை விவகாரத்தை அரசு வாக்காளரிடம் பெரிதாக முன்னெடுக்கவில்லை; பட்டும்படாமலும் தொட்டுக் கொண்டது. ஆனால் தென்மாகாணத் தேர்தலில் தீர்வுப் பொதியை முன்னெடுக்கப் போவதாகத் தெரிவித்தது. சமாதானத் தீர்வு குறித்துப் பிரஸ்தாபித்த போதிலும்' போரை நிறுத்துவது குறித்து அகப்படாமல் பேசிக் கொண்டது.

போர் நிறுத்தப்படுவது சமாதானத் தீர்வோடு தொடர்புபட்டது. ஆனால் அரசு போரை நிறுத்துவது குறித்தோ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்துவது குறித்தோ திட்டவட்டமாக தேர்தல் வாக்குறுதி எதுவும் சொல்லவில்லை.

அரசாங்கம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தைக் கையாளும் விதத்தில் மக்கள் அதிருப்தி அடைந்துள்ளமையாலேயே தென்மாகாண சபைத் தேர்தல் முடிவு அதற்குப் பாதகமாக அமைந்தது எனவும் கொள்ளலாம்.

போர் தமிழ் மக்களை மட்டும் பாதிக்கவில்லை. சிங்கள மக்களையும் பல வகைகளாலும் பாதிக்கிறது. ஆகையால் போரை நீடிக்கும் அரசின் கொள்கையையும் செயற்பாடுகளையும் தென்மாகாணம் ஆதரிக்கவில்லை என்றும் கொள்ளலாம்.

எனவே போரைத் தொடர்வது, சமாதானத் தீர்வு காண்பது ஆகிய தனது இப்போதைய நிலைப்பாட்டை மாற்றிக் கொள்வதும் மறுபரிசீலனை செய்வதும் கட்டாயம் என்பதனை அரசுக்கு இத்தேர்தல் உணர்த்தியிருக்கிறது. அதனைக் கருத்திற் கொண்டு அரசு தன்னைத் திருத்திக் கொள்ளுமா?

# ஏழைகளின் பங்காளனான புனித அந்தோனியார்

# கல்லையும் மெழுகாக்கும் கருணைக்கடல்

புனித அந்தோனியார் பெருநாள் இன்று உலகமெங்கும் கத்தோலிக்கர்களால் கொண்டாடப்படுகிறது அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

ஜூன் பதின்மூன்றாம் நாள்! இன்று உலகெங்கிலுமுள்ள கத்தோலிக்க நெஞ்சங்கள் கோடியற்புதரும், நிகரற்ற கொடைவள்ளலுமான புனித அந்தோனியாரைப் பக்திபூர்வமாக நினைவு கூருகின்றன. அன்பென்ற விளக்கைக் கையிலேந்தி, அருளென்னும் ஒளியை வையகத்திற்குப் பொழிய வந்தவர் தேவகுமாரன் கிறிஸ்து. கல்லும் முள்ளும் நிறைந்த அவரது இலட்சியப் பாதையிலே அர்ப்பணிப்புடன் கால் நகர்த்திச் சென்றவர்தான் மறையறிவில் மேதையென உலகம் போற்றும் புனித அந்தோனியார்.

அவர் போர்த்துக்கல் நாட்டிலுள்ள, லிஸ்பன் நகரில் 1195 ஆம் வருடம் ஆவணித் திங்கள் 15 ஆம் நாள் பிறந்தார். தனது 15 ஆவது வயதில் புனித அகுஸ்தீன் துறவறச்சபையிற் சேர்ந்து மறையியலில் விற்பன்னரானார்.

ஆபிரிக்க பெருநிலப் பரப்பிலுள்ள மொறக்கோ என்ற நாட்டில், திருமறைக்கு எதிராக எழுந்த கலவரத்தில் புனித பிரான்சிஸ் சபைத் துறவிகள் பலர் தம்முயிரைப் பறிகொடுத்தனர்.

இந்நிகழ்ச்சி அந்தோனியாரின் இதயத்தில் எரிந்து கொண்டிருந்த இறைபக்தியில் நெய்யூற்றியது. பின் இத்தாலியின் தெற்கிலுள்ள சிசிலி என்ற இடத்தை யடைந்து, புனித பிரான்சிஸ் சபையிற் சேர்ந்து தமது 25 ஆவது வயதிற் குருவானார். தொடர்ந்து இத்தாலி, பிரான்ஸ் என்ற நாடுகளின் பல பகுதிகளில் நற்செய்திப் பணியில் முழுவீச்சுடன் ஈடுபட்ட இப்புனிதர் இத்தாலியிலுள்ள பதுவா நகரில் 1231 ஆம் வருடம் ஆனித் திங்கள் 13 ஆம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

இளமைப் பருவத்தில் தன் மடாலய மேலாளருக்கு அன்பும், பணிவும் காட்டிய அவரின் வாழ்வில் இறைபணியை முன்னெடுத்துச் செல்லத் தாழ்மைதான் உந்துசக்தியாய் விளங்கியது. மோனத் தூறலில்தான் அவரது நினைவுகள் சதா நனையும்.

**மு. சிங்கராயர்**

பணிவாழ்வில் அவர் முகம் கொடுத்த இன்னல்கள் பல. அப்பெருவாழ்வு பிரகாசிக்கப் போகும் துன்பங்களைக் கண்டு அஞ்சியவரல்லர் அவர்.

காலமெல்லாம் கிறிஸ்துவுக்காகவே வாழ்ந்த அவர் தங்கள் எதிர்காலத்தை யெண்ணி மனங்கலங்கித் தவிக்கும் அடிநிலை மாந்தரைக் கண்டு நெஞ்சுருகினார். சேற்று நிலத்தில் சிக்கிய யானையைப் போல் அவர்கள் தீய வாழ்விலிருந்து மீளமாட்டாமற் திணறும் நிலையை உணர்ந்தார்.

நெல்முனையளவு கூடப் பயனில்லாத அவர்கள் வாழ்க்கையைத் தன் முயற்சியினாலும் முன்மாதிரியினாலும் மாற்றினார். இப்பணி வாழ்வு தான் மானிடத்தைத் தரிசிப்பதற்கான ஒரு மனமுதிர்ச்சியை அவருக்குக் கொடுத்தது எனலாம்.

இப்புனிதர் நமக்குக் காட்டிச் சென்ற செல்நெறியாது? நமது சிந்தனைக்கு இந்த அருளாளர் தந்துசென்ற செய்தி என்ன? என்று சிந்திக்கவேண்டிய காலத்தேவை நமக்கு உள்ளது. முன்னர் ஒருபோதும் அனுபவித்திராத வெவ்வேறான நெருக்கடிகளையும், ஓயாத துயரங்களையும் கண்டு நமது மக்கள் இன்னும் நிமிரவில்லை. நடைபெற்றுக்கொண்டிருக்கும் போரோ, மீளமுடியாத அவஸ்தைக்குள் நமது மண்ணை இழுத்துவிட்டுள்ளது.

பல்வேறுபட்ட பின்னடைவுகளை நாம் சந்தித்துள்ளோம். ஆரோக்கியமான ஓர் எதிர்காலம் நமக்குண்டா என்ற ஆதங்கம் வேறு நெஞ்சைப் பிழிகின்றது. இடியப்பச்சிக்கலாகியுள்ள அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளில் மக்கள் எறிபந்துகளாக உருட்டப்படுகின்றனர். மக்கள் முதுகிலே சவாரிவிடத் தொடங்கிவிட்ட சந்தர்ப்பவாதிகளின் ஊடுருவலையும் இங்கு நாம் பார்க்கின்றோம். அடுத்தவனின் காலை வாரி விடுவதில் தான் இன்றைய மனிதன் கண்கொத்திப்பாம்பு போல கரிசனை கொண்டிருக்கின்றான். எந்த மனிதனும் தனது உண்மை முகத்தைக்காட்ட மறுக்கும் ஒரு விபரீதமான நிலை.

நமது நம்பிக்கையின் வேர்களோடு பற்றியிருந்த விழுதுகள் அறுந்து தொங்குகின்றன. இந்நிலையில் இப்புனிதர் விட்டுச்சென்ற நினைவுகள் நமக்கெல்லாம் நிழல் கொடுக்க விரிகின்றன. அவரிடம் காணப்பட்ட அன்பு, கருணை, திராணம், தாழ்மை என்ற மனித விழுமியங்களை நாம் பற்றிப்பிடிக்க முயல வேண்டும். நற்செய்தியின் மட்டில் அவர் கொண்டிருந்த ஆழமான நம்பிக்கை நான் இன்றும் அவரை நம்பிக்கையுடைய வழிவைத்திருக்கின்றது 'புதுமையுடன் கூடிய பயன்பெற வேண்டுமானால் அந்தோனியாரிடம் செல்லுங்கள்' என்பர் மறைநூலறிஞர் பொனவென்சர்.

இன்றைய நாளிலே கல்லையும் மெழுகாக்கும் அந்தக் கருணைக்கடல் உள்ள இடங்களுக்குச் செல்வோம், சேடமிழுத்துக் கொண்டிருக்கும் எமது எதிர்பார்ப்புகளையும் மூளியாகிவிட்ட உணர்வுகளையும் அவரின் காலடியில் அர்ப்பணிப்போம், இருகரங்களையும் குவித்து, நெக்குருகி நின்று' ஏழைபங்காளனான புனித அந்தோனியாரே! எளியோராம் எமக்காக இறைமகன் கிறிஸ்துவை மன்றாடும்' என்று செப்பிபோம்.

★

## யாழ்ப்பாண மாவட்டத்தில் சாரணர் வேலை வாரம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

குடாநாட்டில் சாரணர் வேலை வாரம் எதிர்வரும் 19 ஆம் திகதிமுதல் 27 ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்பட உள்ளது.

இந்த வேலை வாரத்தில் சாரணர்கள் மேற்கொள்ளவுள்ள வேலைகளுக்கான வேலை அட்டைகள் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியில் வைத்து மாவட்ட ஆணையாளர்களிடம் வழங்கப்படும் என்று சாரணர் வலய உத்தியோகத்தர் மா. புவனேந்திரன் அறிவித்துள்ளார்.

மாவட்ட ஆணையாளர்களிடம் வழங்கப்படும் அட்டைகள் பின்வரும் இடங்களில் வைத்து மறுநாள் 17 ஆம் திகதி சாரணர் தலைவர்களிடம் விநியோகிக்கப்படும்.

★ யாழ்ப்பாணம் — யாழ். மத்திய கல்லூரி

★ காங்கேசன்துறை — சந்நிதானை சிவப்பிரகாச வித்தியாலயம்

★ பருத்தித்துறை — வேலாயுதம் மகாவித்தியாலயம்.

★ கிளிநொச்சி — மகளிர் கல்லூரி, சாவகச்சேரி.

சாரணர் வேலை வாரம் அகில இலங்கை ரீதியில் நேற்று ஆரம்பமாகியுள்ள போதிலும் பல தாமதங்கள் காரணமாக குடாநாட்டில் அது அடுத்த வாரமே நடைபெறவுள்ளது.

வேலை வாரத்தில் ஈடுபடும் சாரணர்கள் மிதி வெடிகள் குறித்து மிகுந்த முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி மாணவர்களின் முதலாவது மெய்வல்லுநர் போட்டியின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை உடற்கல்வி மாணவர் மன்றத் தலைவர் ந. விஜயகுமார் தலைமையில் மருத்துவபீட மைதானத்தில் நடைபெறவுள்ளன

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக வர்த்தக முகாமைத்துவ பதில் பீடாதிபதி . தேவராஜாவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு நிகழ்வாக உடற்கல்வி மாணவ மாணவிகளின் ஜிம்னாசியம் இடம்பெறவுள்ளது. (கு)

## நாளை

வைகாசி 31

திங்கட்கிழமை

திதி: பிரதமை

முன்னிரவு: 11.21 வரை

நட்சத்திரம்: மிருகசீரிடம்

பிற்பகல்: 3.34 வரை

சுபநேரம்: 11.53 — 1.23

ராகுகாலம்: 7.23 — 8.5[illegible]

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி.)

### உதயவாக்கு

ஒரு மனிதனுக்கு தன்னம்பிக்கை மட்டும் அல்ல; எந்த சந்தர்ப்பத்திலும் துவண்டு விடாத மனத்துணிவும் வேண்டும்.

— வால்டேர் டாயில் விட்டேபிஸ்

## நற்சிந்தனைப் பாராயணமும் பூசையும்

யாழ்ப்பாணம், ஜூன் 13

கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் சமாதிக் கோயிலில் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு ஆயிலிய நட்சத்திர நற்சிந்தனை பாராயணமும் பூசையும் நடைபெறவுள்ளன.

அடுத்த நாள் வெள்ளிக்கிழமை நல்லூர்த் தேரடியில் வழமைபோல் பூசைகள் இடம்பெறும். (இ-7-30)

## பரிசளிப்பு விழா

'உதயன்' நிறுவனத்தின் ஆதரவில் யாழ். இந்துக் கல்லூரி பூப்பந்தாட்டக் கழகம் நடத்திய பூப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வைத்திய கலாநிதி ச. சிவசங்கர் பிரதம விருந்தினராகக் கலந்துசிறப்பிப்பார். (ஐ-3)

## வாகன வரி அனுமதிச் சிட்டைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 13

நல்லூர் பிரதேச செயலகம் மூலமாக தமது வாகனங்களைப் பதிவு செய்தவர்களுக்கான 'வாகன வரி அனுமதிச் சிட்டைகள்' தற்போது வழங்கப்படுவதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

வாகனங்களைப் பதிவு செய்த போது பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட பற்றுச் சிட்டுக்களைச் சமர்ப்பித்து வாகன வரி அனுமதி அட்டைகளைப் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

## சமய நிகழ்ச்சிகளில்

அராலி — ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த மகா சங்காபிஷேக விழா நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது

ஆரம்பக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். (க)

★ ★ ★

திருநெல்வேலி, ஜூன் 13

கந்தமடம் அரசடி வீதி செல்வ நாகபூசணி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. (க-135)

★ ★ ★

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின் தேர்ப்பவனியும் திருச்சுரூப ஆசீர்வாதமும் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலி பூஜை யாழ். ஆயர் அதி. வந். தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையால் ஒப்புக் கொடுக்கப்படும். ([illegible]-17-30)

## இன்று

உரும்பிராய் லயன்ஸ் கழகத்தினர் ஏற்பாடு செய்துள்ள அநாதைப் பிள்ளைகளுக்கான இலவச மருத்துவப் பரிசோதனையும், வைத்திய ஆலோசனையும், மருந்து அன்பளிப்பும் இன்று ஞாயிற்றுக்கிழமை உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோயில் வடக்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்மன் கோயிலின் ஆச்சிரமத்தில் காலை 9 மணி முதல் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு லயன் ஸ்டாக். சீ. இந்திரராஜா தலைமை வகிப்பார். (ஐ.4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடல் வளம் நிறைந்த திருகோணமலையில் தகரமீனை நிவாரணமாகப் பெறும் மீனவர்

திருமலைத் திருமுகம்
— சங்கீத் —

திருகோணமலைக் கடலில் தொழில் செய்வது குறித்து படையினர் அண்மையில் விதித்த கட்டுப்பாடுகள் காரணமாக இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரக் கணக்கான மீனவக் குடும்பங்கள் மிகவும் இக்கட்டானதும் கஷ்டமானதுமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

கடல் வலயத்தடை மற்றும் தொழில் செய்வதற்கான நேரக்கட்டுப்பாடு ஆகியன கஞ்சியோ, கூழோ, அருந்தி எளிமையான வாழ்க்கை வாழ்ந்த மீனவக் குடும்பங்களின் வயிற்றில் மண்ணை அள்ளிப் போட்டு விட்டன என்றே கூறவேண்டும்.

கடற்றொழில் அன்றிவேறு எந்தத் தொழிலையும் செய்தறியாத இந்த மீனவர்களின் குடும்பங்களின் பரிதாப நிலையை அறிய அல்லது கண்ணால் கண்டு உரிய நடவடிக்கை எடுக்க எவரும் இல்லாத நிலை திருமலை மண்ணில் இன்று காணப்படுகின்றது.

கடலில் கால் வைக்கக் கூடாது, கடல் வளங்களைத் தொடக் கூடாது எனக் கூறுவது போல கடல் வலயத் தடை, காலக் கட்டுப்பாடு என்றெல்லாம் தடை விதிக்கப்பட்டுள்ளதால் திருமலைப் பிரதேச மீனவர்கள் தகரத்தில் அடைக்கப்பட்ட மீனை நிவாரணமாகப் பெற்று வாழ்வை நடத்த வேண்டிய வினோதமான நிலை உருவாகியுள்ளது.

தமிழர்களின் பிரதிநிதிகள் தாங்களே எனக் கூறிக் கொண்டு அரசின் மீது சாய்ந்து கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் எவருமே இந்த மீனவர்களை ஏறெடுத்துப் பார்ப்பதாக இல்லை.

திருமலை மீனவர்களின் வாழ்வு சுமாராகஓடிக்கொண்டிருந்த வேளையில் — அண்மையில் பேரிடி ஒன்று அவர்களின் வாழ்க்கையில் வந்து வீழ்ந்தது.

கடற்பரப்பில் எந்தெந்த நேரம் மீன் பிடிக்கலாம் என்பதும், எவ்வளவு தூரம், எந்தப் பகுதிக்குச் சென்று தொழில் செய்யலாம் என்ற கட்டுப்பாடுகளே அந்தப் பேரிடிகளாகும்.

மீன்பிடி தொடர்பாக ஸ்ரீலங்கா கடற்படை விடுத்துள்ள புதிய உத்தரவு மீனவர்களைப் பெரிதும் கலங்க வைத்துள்ளது. புதிய நேரக் கட்டுப்பாட்டின் பிரகாரம் மீனவர்கள் காலை ஆறு மணிக்கு கடலுக்குச் சென்று மீண்டும் மாலை ஆறுமணிக்கு முன்னர் கரைதிரும்ப வேண்டும் என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை குறிப்பிட்ட பிரதேசத்திலேயே மீன் பிடிக்க வேண்டும் எனவும் கடற்படையினர் தமது அறிவிப்பில் தெரிவித்துள்ளனர். குறிப்பாகக் கோணேசர் மலைக்கு அப்பால் உள்ள கடற்பிரதேசத்தினுள் மீனவர்கள் செல்லக் கூடாது எனவும் படையினர் கண்டிப்பான கட்டளை பிறப்பித்துள்ளனர்.

இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் படையினரால் தொழில் செய்வதற்கு மறுக்கப்பட்டுள்ள கடற்பிரதேசத்திலேயே படையினரின் கட்டுப்பாடற்ற பிரதேசங்கள் எனக் கூறப்படும் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் தொழில்செய்வது வழக்கமாகும்.

வழமையாகவே வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இந்த மீனவர்கள் சிறிய தோணிகளில் சென்றே மீன் பிடிப்பது வழக்கமாகும். தற்போது கடற்படையினர் அறிவித்துள்ள மீன்பிடித் தடையானது இந்த மீனவர்களைப் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளிவிட்டது.

பரிதாபத்துக்குரிய இந்த மீனவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு (ஐ.சி.ஆர்: சி), அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் (யு. என். எச்.சி.ஆர்) மற்றும் உள்ளூர், வெளியூர் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் அண்மையில் கடற்கரைச் சேனை தமிழ் வித்தியாலயத்தில் கூடி ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தினர்.

எனினும் திர்க்கமான முடிவோ உகந்த உதவித்திட்டமோ வகுக்கப்படாமல் மீண்டும் கூடி ஆராய்வதற்கு தீர்மானமாகியுள்ளது,

பசியால் வாடும் மீனவர்களோ அடுத்த வேளைக்கு என்ன செய்வது என்று தெரியாத நிலையில் கஷ்டமுறுகின்றனர். அவர்களது வீடுகளின் அடுப்புகளில் பூனைகள் படுத்துறங்கும் நிலையே உருவாகியுள்ளது,

இந்தச்சமயத்தில் ஒருகணம் திருமலை மண்ணை ஒரு தசாப்தம் பின்நோக்கிப் பார்க்க மனம் தூண்டுகிறது. ஆம்; கிழக்கிலங்கையின் நெற்களஞ்சியம் என திருமலை வர்ணிக்கப்பட்ட காலம் ஒன்று உண்டு. நில வளம் மட்டுமன்றி கடல் வளமும் இந்தமாவட்டத்தின் பொருளாதாரத்தை மினுங்கச் செய்தது.

பாதுகாப்புக் காரணங்கள் கூறப்பட்டு தூரத்தடையும், நேரத்தடையும் விதிக்கப்படும் வேளை பசித்த வயிறுகளின் பரிதாப நிலையினையும் சம்பந்தப்பட்டோர் எண்ணிப்பார்க்க வேண்டும். தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என மாறினால் மக்கள் வாழ்க்கை எங்கே போய் முடியப் போகிறது? ★

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# கல்முனையில் தமிழ் - முஸ்லிம் பிரிவை ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு ஆப்பு!

## நகரசபை அந்தஸ்து கிடைத்ததன் மூலம்

அம்பாறை அஞ்சல்
— அகீல் —

தென்கிழக்கின் முகவெற்றிலைஎன வர்ணிக்கப்படும் கல்முனை கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல் புதிய சரித்திரம் படைத்திருக்கின்றது. ஆம்: அது நகரசபை அந்தஸ்தைப் பெற்றுள்ளது.

எப்போதோ தரம் உயர்த்தப்பட்டு நகரசபையாக ஆகியிருக்க வேண்டிய கல்முனை இப்பொழுதேனும் நகர சபை அந்தஸ்தைப் பெற்று விட்டதே என மக்கள் ஆதங்கம் கொண்டுள்ள அதே வேளை அது விரைவில் மாநகரசபை அந்தஸ்தையும் பெற்றுவிட வேண்டுமென்ற கனவில் கல்முனை வாழ் மக்கள் இன்று லயித்து நிற்கின்றனர்.

ஒரே. தாய் வயிற்றுப் பிள்ளைகளாக கல்முனைப் பிரதேசத்தில் வாழ்ந்துவரும் தமிழர்களையும், முஸ்லிம்களையும் பிரித்தாள முயலும் எந்தச் சக்திகளுக்கும், சமாதான விரும்பிகள் இப்பிரதேசத்தில் இன்றும் என்றும் இடமளிக்கக் கூடாது என்னும் திடசங்கற்பமே கல்முனையை நகரசபையாக உயர்த்திய அரசியல் நடவடிக்கையாகுமென இந்த நகரசபை அந்தஸ்துக்கு உயர்த்தும் பணியில் முன்னின்று உழைத்து வெற்றி கண்ட சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத்தலைவரும், துறைமுக அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சருமான எம்.எச் எம். அஷ்ரப் விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கும், கிழக்கும் இணைந்த ஓர் அலகாக இருக்கவேண்டுமென்றும், அந்த அலகுக்குள் முஸ்லிம் சமுதாயம் நிபந்தனையற்ற வகையில் வாழவேண்டுமென்றும் கூறி பரந்த மனமுடையவர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் சில அரசியல் வியாபார்ரிகள் கல்முனை நகரசபையாக உயர்வதை எதிர்த்து தோல்வி கண்டமைபற்றிக் குறிப்பிட்ட அமைச்சர் அஷ்ரப் கல்முனையில் தமிழர்களும் முஸ்லிம்களும் இணைந்து வாழக்கூடாது என்ற காரணத்திற்காக கல்முனையைத் துண்டாடத் துடித்தவர்களுக்கு வடக்கும் கிழக்கும் இணைந்த ஓர் அலகுகள் தமிழர்களோடு முஸ்லிம்களும்இணைந்து வாழ வேண்டுமெனச் சொல்வதற்கு என்ன யோக்கியதை இருக்கின்றது என்றும் தமது அறிக்கையில் கேள்வி எழுப்பியிருக்கிறார்

கல்முனை பிரதேச சபை நகர சபையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ள நிகழ்வு சாதாரணமான ஒரு வரலாற்று நிகழ்ச்சியல்ல. அது ஒரு பெரிய சாதனை என்றே கல்முனைப் பிரதேச மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

கடந்த 11 - 06 - 1999 வெள்ளிக்கிழமை கல்முனைப் பிரதேசம் முழுவதுமே அலங்காரக் கொடிகளாலும் தோரணங்களாலும் நிறைந்து முழுவிழாக்கோலம் பூண்டு காணப்பட்டது.

கல்முனையை நகரசபையாகத் தரமுயர்த்தும் உத்தியோக பூர்வவிழா அன்று முழுநாள் விழாவாக நடைபெற்றது.

விழாவில் உள்ளூராட்சி மாகாணசபைகள் அமைச்சர் அஸ்ஸெய்யித் அலவி மௌலானா பிரதம விருந்தினராகவும், அமைச்சரும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவருமான எம். எச். எம். அஷ்ரப் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

கல்முனைப் பிரதேச செயலாளரும் நகரசபை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருமான ஏ. எல். எம். பளீல் தலைமையில் பிரதம விருந்தினர்களுக்கு அன்றைய தினம் கல்முனையில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

கல்முனை வளைவுச் சந்தியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நகரசபை அந்தஸ்துப் பெற்றமைக்கான நினைவுத் தூபியை அமைச்சர் அலவி மௌலானா திறந்து வைத்ததுடன், உத்தியோகபூர்வ நிகழ்வாகத் தரமுயர்த்தலையும் செய்து வைத்தார்.

கல்முனைப் பிரதேசத்தில் வாழும் சகல இன மக்களும் பங்குகொண்ட இப் பெருவிழாவில் உரையாற்றிய அமைச்சர் அலவிமௌலானா ஓர் உண்மையைப் பகிரங்கமாகத்தமது உரையின்போது பலத்த கைதட்டலுக்கு மத்தியில் கூறினார்.

அதாவது அமைச்சர் அஷ்ரப் எமது பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்திருக்காவிட்டால் நானெல்லாம் அமைச்சர்களாக ஆகியிருக்க முடியாது. அவர் வேறு கட்சியுடன் இணைந்து [illegible] அவர் அமைச்சராகவே இருந்[illegible]

(ஆறாம் பக்கம் பார்க்க)

# யாழ்ப்பாணத் தமிழ்

**36 வருடங்கள் கல்லூரியில் தமிழும் சைவமும் பயிற்றுவித்த ஆசிரியரின் — முதலாந்தர அதிபரின் — உள்ளக் குமுறல் இது.**

"யாழ்ப்பாணத் தமிழ் தப்பிப் பிழைப்பது எப்போது?" என்றதலைப்பில்14-09-1947 இல் 'ஈழகேசரி''யில் வெளியான கட்டுரையை 02-05-1999 ஆம் திகதியன்று உதயன் பத்திரிகையில் மறுபிரசுரம் செய்தமைக்கு நன்றி. வாசித்து மகிழ்ந்தவர்களுள் யானும் ஒருவன்.

இன்று யாழ்ப்பாணத்தில் தமிழ் எப்படி வளருகின்றது என்பதைக் கற்றோர் சிந்திக்க வேண்டும்.

நான் ரவுணுக்குப் போக வேண்டும்.

பஸ்லேற்றாய்ப் போய்ச்சு.

நான் யவ்னா போறன்.

தம்பி ஸ்கூலுக்குப் போட்டான்.

கோப்பிறட்டி மனேச்சர் வாறார்.

றிங்ஸ் குடிச்சிட்டுப் போங்கள்.

அப்பா மாக்கெற்றுக்குப் போட்டார்.

இப்படியாகச்சிலர் கதைக்கின்றார்கள்.

ஒரு சிலர் சுத்தமான தமிழில் பேசுகிறார்கள். எழுதுகிறார்கள். ஆங்கிலம் நன்றாகக் கற்ற சிலர் தமிழில் பேசும்போது ஆங்கிலச் சொல் கலக்காமலே பேசுகிறார்கள்.சிலர் தமிழில் கடிதம் எழுதும் போது பல ஆங்கிலச் சொற்களும் கலந்தே எழுதுகிறார்கள். தமிழும் ஆரியமும் படித்த சிலர் ஆரியச் சொற்களையும் சேர்த்து எழுதுகிறார்கள்.

தேநீரகம், தேனீரகம் என்றும் பெயர்ப்பலகை காணப்படுகின்றது. இன்பத்தமிழ், செந்தமிழ், உயர் தனிச்செம்மொழி, வண்டமிழ் என்றெல்லாம் பெருமை பேசுகின்றோம். எங்களை ஆட்சி செய்யும் மொழி ஆரியம் என்றும் கூறலாம்.

சோதிடம் முதல் புராணம் வரை மூலம் எந்த மொழி? ஆரியம் அறிவுமொழி. தமிழ் அன்பு மொழி என்று சமாதானம் கூறுகின்றனர். தமிழ்ச் சொல் இருக்க வேறு மொழியை ஏன் கலந்து எழுதுகிறார்கள், பேசுகிறார்கள்? மக்களுக்குப் பெயர் வைக்கும் போது பிள்ளை எழுத முடியாத சொற்களில் பெயர் அமைகிறது.

[உதாரணம்:றஜிக்கா, மயூறிக்கா, யுவர்ணன், சங்கீத்]

நீதிமன்றத்திலே, மே மூன்றாந் திகதி வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படும் என்பதை வைகாசி மூன்றாந் திகதி என்று அறிவிக்கிறார்கள். இரண்டாந் தவணை முடிவு யூலை 30 வெள்ளிக்கிழமை என்பதை ஆடி 30 என எழுதலாமா? யூலையை தமிழில் ஆடி எனக் கருதலாமா? அல்ல. ஜூலை 14 ஆம் திகதிக்குப் பின்னர் தான் தமிழுக்கு ஆடி மாதம் பிறக்கும்.

தமிழர் தம் பெயர்களை எழுதும் போது கனகரெட்ணம் இராசறட்ணம் என்

## தனம்

றெல்லாம் எழுதுகிறார்கள். எப்படியும் எழுதும் உரிமை உண்டு. ஆனால் தமிழ் அன்னை நகைப்பாளே! கனகரத்தினம் இராசரத்தினம் என்று எழுதும்போதும் சொல்லும் போதும் இன்பத்தேன் வந்து காதில் பாயவில்லையா?

சிலர் வணக்கம் என்ற சொல்லுடன் 'கள்' சேர்த்து வணக்கங்கள் என்றும் நன்றி என்ற சொல்லுக்கு ''கள்'' சேர்த்து நன்றிகள் என்றும் சொல்கிறார்கள். இலக்கணம் கற்றோர் இது பற்றிச் சிந்திப்பார்களாக! ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையைக் கெல்லி எலியைப் பிடிக்கும் வவுனியாப் பாதுகாப்பு நடவடிக்கைகள்

'வவுனியா நகரப்பகுதி சுற்றிவளைப்பு' என்ற செய்தி இப்போது அடிக்கடி வெளியாகின்றது.

ஆயிரக்கணக்கானவர்களின் அடையாள அட்டை, வவுனியா வதிவிடப்பாஸ் ஆகியவற்றை வாங்கிக்கொண்ட படையினர் அவர்களை வவுனியா நகரசபை மைதானத்திற்குள் வரச்சொல்லி விட்டு அங்கே அவர்களைக் கொளுத்தும் வெயிலில் காயோகாயென்று காயவைத்துவிட்டு இரண்டுமூன்று தலையாட்டிகளின் முன் நிறுத்திவிட்டு வீட்டுக்கு அனுப்பி விடுவது இப்போது வவுனியாவில் புதிதாகக் கிளம்பியுள்ள ஒரு தேடுதல் பாணியாகும்.

படையினரால் வவுனியாவில் வழங்கப்பட்ட பாஸ்களில் போலிகள் நடமாடுவதாகவும் அவ்வாறான பாஸ்களைக் கொண்டு நகரப்பகுதிக்குள் புலிகள் நடமாடுவதாகவும் கிடைத்த தகவல்களையடுத்தே இந்தப் புதிய தேடுதல் முறை நடத்தப்படுவதாகப் படைத்தரப்பு சொல்லி வருகின்றது.

அவர்களின் தரப்பு நியாயத்தையும் உதாசீனம் செய்வதற்கில்லை. ஏனென்றால் வவுனியாவிலே பாரம்பரியமாக— பரம்பரை பரம்பரையாக — வாழும் அப்பாவித் தமிழருக்கே ஆயிரம் கேள்விகள். ஆயிரம் அத்தாட்சிகளுக்குப்பின்னர் வவுனியாவிற்குள்

## புதிய தேடுதல்களினால் இயல்பு நிலை பாதிப்பு!

மட்டும் நடமாடக் கூடிய பாஸ் வழங்கியிருக்கிறது படைத்தரப்பு. ஆனால் அப்பப்போ ஆங்காங்கே கைது செய்யப்படும், கொல்லப்படும் புலிகளிடமோ சர்வ சாதாரணமாக கொழும்பு வரை சென்று வரக்கூடிய திறந்த நிரந்தர பாஸ்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையின் தார்ப்பரியத்தைஉணர்ந்தோ என்னவோ அண்மைக்காலங்களில் மலையைக் கெல்லு எலியைப் பிடித்த கதையாக அடிக்கடி சுற்றி வளைப்புகளும் பாஸ்பரிசோதனைகளும் நடைபெற்று வருகின்றன. ஆனால் இவைகளில் போலி பாஸ் வைத்திருப்போர் பிடிபட்டார்களா? புலிகள் கைது செய்யப்பட்டார்களா? என்று அலசி ஆராய்ந்தால் இந்த நடவடிக்கையானது வவுனியா மக்களின் ஒரு நாள் இயக்கத்தை ஸ்தம்பிக்கச் செய்வதாகவும் அவர்களுக்குஅலைச்சலைக் கொடுப்பதாகவும் அமைகிறதே தவிரவெறெந்த உருப்படியான காரியத்தையும் அது சாதித்ததாகத் தெரியவில்லை.

குறிப்பிட்ட சுற்றிவளைப்பு தினங்களில் காலையில் அதிரடிப்படையினர் பஸ்களில் கொண்டுவந்து குவிக்கப்பட்டு விடுவர். இதுவே அங்குள்ள மக்களை ஒரு தயார் நிலைக்குக் கொண்டு சென்று விடும். அவரவரே தங்கள் சொந்தக் காரியங்களை அவசர அவசரமாகப் பார்த்துக் கொண்டு நகரப்பகுதியை விட்டு வெளியேறி விடுகின்றனர். அதன் பின்னர் அங்கொன்றும் இங்கொன்றுமாக மருந்து எடுக்க வந்தவர்கள் முதல் மரக்கறி வாங்க வந்தவர்களினதும் அலுவலகத்திற்கு வந்தோரினதும் அவசர அலுவல்களுக்காக வந்தோரினதும் பாஸ், அடையாள அட்டை என்பன அள்ளிக் கொண்டு போகப்படும். அவர்கள் அனைவரும் பாஸ், அடையாள அட்டை இல்லாத நிலையில் வீதியிலே நடமாட முடியாத நிலையில் நகரசபை மைதானத்திற்குச் சென்று சுட்டெரிக்கும் வெயிலிலும் அல்லது கொட்டும் மழையிலும் காத்திருக்க வேண்டும்.

காலை 9 மணிக்கு பாஸ்களை பறிக்கத் தொடங்கும் படையினர் பட்டி தொட்டி எல்லாம் திரிந்து பாஸ் பறிப்பை மேற்கொண்டு விட்டு நகரசபை மைதானத்தை வந்தடைய பிற்பகல் 2-3 மணியாகி விடும். அதன் பின்னர் அனைவரும் வரிசையில் தலையாட்டி முன் நிறுத்தப்படுவர்.

அவர் அப்பாவித் தமிழராம் இருந்தாலும் தலையாட்டியைத் தாண்டிச் செல்லுகை வரை உயிர்போய் மறுபிறப்பு எடுத்தது போலாகிவிடும். அதன்பின்னர் அவரவர் தத்தமது பாஸ்கள், அடையாள அட்டைகள் என்பனவற்றை அடையாளம் காட்டி எடுத்துச்செல்ல அன்றையபொழுது போய்விடும்,

இதனால் இப்போது வவுனியா நகரப் பகுதியில் பகலிலும் சன நடமாட்டமும் குறைந்தே போய்விட்டது.

இதுதவிர நகரை அண்டிய பகுதிகளில் ஓட்டோ, வான், கார் ஆகிய வாகனங்களுக்குள் புலனாய்வுப் பிரிவினர் நோட்டம் விட்டபடி இருப்பர். கொஞ்சம் சந்தேகமான நடமாட்டம் இருந்தால் போதும் எவரும் அள்ளிப் போட்டுக் கொண்டு போகப்படுவர். அவர் பின்னர் தனது பூர்வீகம், தொழில், உற்றார், உறவினர், சொத்து, சுகம் எல்லாம் சொல்லியபின் ஓரளவிற்கு அவரை நம்பியபின் அவர் வெளியே வந்துவிடு

(6ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வலம்

-ரா.இளவரசன்-

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# மக்கள் குடியிருக்கும் பகுதிகளில் ஆயுதங்களை பரீட்சித்துப் பார்ப்பதா?

மட்டக்களப்பு முறக்கொட்டான் சேனையில் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இளம் யுவதி ஒருவர் பலியான சம்பவம் காரணமாக முகாம் பொறுப்பதிகாரியான கப்டன் ஆர். பெர்னாட் செலாட் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை

## மட்டக்களப்புப் பெண்ணின் கொலை எழுப்பும் கேள்வி

இராணுவ முகாம் சுற்றாடலில் வசிப்பவர்கள், இராணுவ நடமாட்டங்களின் போது அவ் வழியாக செல்பவர்கள் படையினரின் துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்றில் பலியானால் அல்லது காயமடைந்திருந்தால் தற்செயல் அல்லது இருதரப்பு மோதலில் அகப்படல் போன்ற காரணங்கள் விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட படையினர் தப்பித்துக்கொள்வது வழக்கம்.

ஆனால் முறக்கொட்டான் சேனையில் கடந்த ஞாயிறு இரவு முகாம் சுற்றாடலில் வசிக்கும் கந்தசாமி விக்கினேஸ்வரி (22 வயது) என்ற யுவதியின் துப்பாக்கிச் சூட்டு மரணச்சம்பவம் விபத்து மரணம் அல்ல;கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி கே. தட்சணாமூர்த்தி ஸ்தலத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு 'கொலை' எனத் தீர்ப்பு வழங்கினார். அதுமட்டுமல்ல சம்பவத்திற்குப் பொறுப்பான முகாம் பொறுப்பதிகாரியைக் கைது செய்யவும் உத்தரவிட்டார்.

இராணுவ முகாமுக்கு ஒரு வாரத்துக்கு முன்பு ரீ 56 எல். எம். ஜி. என்ற புதிய ரகத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை சுடக்கூடிய ரீ 56 எல். எம். ஜி. ரகத் துப்பாக்கியை முகாம் பொறுப்பதிகாரி பரீட்சித்துப் பார்த்துள்ளார். எட்டு துப்பாக்கி ரவைகள் டுமீல்... டுமீல்... என வெளியேறின.

அதில் ஒன்று அயல்வீட்டு யுவதி ஒருவரின் உயிரைப் பறித்து விட்டது.

இம்மரணம் குறித்து விசாரணை மேற்கொண்ட மேலதிக நீதிபதி கே. தட்சணாமூர்த்தி முகாம் சுற்றாடலில் மக்கள் நடமாட்டம் அற்ற பிரதேசங்களை நோக்கிப் பரீட்சித்துப் பார்க்க அங்கு வாய்ப்பு வசதிகள் இருப்பதை அவதானித்தார்.

'தண்டனைக் கோவை 249 ஆம் பிரிவு 42 ஆம் உபபிரிவின் கீழ் ஒரு செயலைச் செய்பவர் அதனால் மற்றவருக்கு ஆபத்து ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படும் எனத் தெரிந்திருந்து உயிரிழப்பு ஏற்படின் அது கொலையாகும்.

இந்த அடிப்படையில் கந்தசாமி விக்கினேஸ்வரியின் மரணம் கொலை எனத் தீர்ப்பு வழங்கினார்.

சம்பவத்திற்குப் பொறுப்பான முகாம் பொறுப்பதிகாரியைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறும்—

அந்த ரீ-56 ரக எல். எம்ஜி துப்பாக்கியை பற[illegible] செய்யுமாறும் பொலீஸாருக்கு கட்டளையிட்டார்.

மரண விசாரணைக்கு சமுகமளிக்காமல் தலைமறைவான முகாம் பொறுப்பதிகாரி 3 ஆம் நாள் கைது செய்யப்பட்டார். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டார். எதிர்வரும் 23 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விடப்பட்டதை அடுத்து முகாம் பொறுப்பதிகாரி தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குடியிருப்புக்களுக்கு அருகே அமைந்துள்ள படைமுகாம்களில் இத்தகைய ஆயுதப் பயிற்சிகளை மேற்கொள்வது சாதாரண மக்களின் உயிருடன் விளையாடும் செயல் என்பதை இச்சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

அதேநேரம் வெல்லாவெளி பொலிஸ் நிலையத்திற்கு விசாரணைக்காகச் சென்று பின்னர் காணாமற் போன மண்டூர் வாசிகள் இளைய தம்பி நாராயணபிள்ளை, பூபாலபிள்ளை தியாகராசா ஆகியோர் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவுவிசேட விசாரணையொன்றை ஆரம்பித்துள்ளது.

14-01-1999 அன்று பொலீஸ் நிலையம் சென்ற இவர்கள் மறுநாள் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு குற்றப்புலனாய்வுத் தலைமையகத்திலிருந்து மட்டக்களப்புக்கு வந்த குழு ஒன்று காணாமற்போனவர்களின் உறவினர்கள், பொலீஸார், மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பொ. செல்வராஜா ஆகியோரின் வாக்கு மூலங்களை [illegible]து.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## மட்டக்களப்பு மடல்

-உதயசாந்தி-

## எதிரொலி..

- இடியன் -

புதிய ஆலயம் கட்டும் அனுருத்தவின் முயற்சி தோல்வியடைந்துவிட்டதாம்; நிதியுதவி செய்வதற்கு வர்த்தகர்கள் பலர் விருப்பவில்லையாம்!

★ இந்தக் "கோபுரத்தை" நம்பி அவர் என்னென்ன "கோட்டை" களைக் கட்டியிருப்பாரோ?

இதுவரை கண்டுபிடிக்கப்பட்டவற்றிலேயே மிகப் பெரிய அளவினதான கற்கோடரி ஒன்று ஒரிஸா மாகாணத்திலே கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்!

★ அது தமிழர்களின் கோடரியாகத்தான் இருக்க வேண்டும் என்று இங்குள்ள சிலர் கருதுகின்றார்கள். மிகப் பெரிய "கோடரிக் காம்புகள்" தமிழர்களிடந்தான் இருக்கின்றனவாம்!

ஆட்லறி இயக்குநரான சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே சுட்டுக் கொண்டு தற்கொலை செய்துகொண்டார்!

★ தன் வினை தன்னைச் சுடும் என்பதற்கு உதாரணமாக இதைக் கொள்ளலாமோ?

ராஜபக்ஷவின் குடும்பத்துக்கு விடுக்கப்பட்ட கொலைப் பயமுறுத்தல் காரணமாக, செம்மணிப் புதைகுழி தோண்டப்படுவதில் காலதாமதம் ஏற்படலாம் எனச் சிலர் அஞ்சுகின்றனர்.

★ "தோண்டில் விரைவாகத் தோண்டுக" அஃதின்றேல் தோண்டலில் தோண்டாமை நன்று—என்று கோஷமெழுப்பலாம்!

அடுத்த பிரதமராகக் கதிர்காமர் நியமிக்கப்படுவார் என "ராவய" பத்திரிகை தெரிவிக்கின்றது.

★ தீர்வுப்பொதியைக்காட்டிக்காட்டிக் களைத்துப்போனவர்கள் இனி, கதிர்காமரைத் தூக்கி வைத்துக் காவடியா (ட்) டப் போகின்றார்களோ?

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு உதவப் பிரிட்டன் இயன்றவரை முயற்சி எடுக்கும்!

★ அந்த உதவியை உதறித் தொலைக்க இலங்கையும் இயன்றவரை முயற்சி எடுக்குமே!

ஜனாதிபதி இருக்கும் அலரி மாளிகையைச் சுற்றி 3 கோடி 20 இலட்சம் ரூபா செலவில் விசேட பாதுகாப்பு அரண் அமைக்கப்படுமாம்!

★ கொலைப் பயமுறுத்தல்களிலிருந்து அவரைத் தப்ப வைப்பதற்காகவா அல்லது குடிமக்களிடமிருந்து அவரைத் தனிமைப்படுத்தவா?

உலகக் கோப்பைக்கான இந்திய — பாகிஸ்தான் போட்டியின் போது பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

★ விளையாட்டு 'வினை' யாட்டாக மாறாமலிருக்கப் போலும்!

புதிய துப்பாக்கி ஒன்றைச் சோதித்த போது அது தவறுதலாக வெடித்ததில் இளம்பெண்ணொருவர் மரணமானார். துப்பாக்கியைச்சோதித்த இராணுவக் கப்டன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

★ துப்பாக்கியைச் சோதனை செய்யப்போக, இப்போது து (ர்) ப்பாக்கி (யம்) அவரைச் சோதனை செய்கின்றது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையைக் கெல்லி...

(5 ஆம் பக்கத் தொடர்)

வார். ஆனால் வன்னியிலிருந்து வந்திருப்போர் பாடு தான் திண்டாட்டம். பாதுகாப்பற்ற பகுதியில் உள்ளவரென்ற அடையாள அட்டையாயின் அவர் கவனிக்கப்படும் விதமே தனி. அதுமட்டுமல்ல அவர் கண்டபடி கவனிக்கப்படும் போது உளறிக் கொட்டிவிட்டால்– அவ்வளவுதான். அவரின் உற்றார் உறவினர் நண்பர்கள் எல்லாரும் கூண்டோடு அள்ளிச் செல்லப்படுவர்.

இவையெல்லாம் வவுனியாப் பகுதியில் நடைபெறும் கைதுகள். ஆனால் கள்ளப் பாஸ், களவான தென்பகுதிப் பயணம் என்பவற்றால் கொழும்பிலிருந்து வந்து கைது செய்யப்படுவோரும் உண்டு.

இவ்வாறாக பலரும் வவுனியா பகுதியில் கைது செய்யப்படுவதற்கு முழு முதற் காரணமாக அமைவது போலிப் பாஸ் தான். சில தனியார் தாங்களாகவே படையினரின் பாஸ்களை அச்சடித்து,பொலீஸ் அதிகாரிகளின் றப்பர் முத்திரைகளைச் செய்து வைத்து பாஸ் வழங்கும் அலுவலகங்களை நடத்தி வந்த இடங்கள் பொலீஸாரால் கண்டு பிடிக்கப்பட்ட பின்னரே இந்த சுற்றிவளைப்புகளும், பாஸ் பரிசோதனைகளும் முடுக்கிவிடப்பட்டன.

இந்த முடுக்கி விடும் நடவடிக்கையால் பாஸ் வழங்கியவர்களும் களவான பாஸைப் பெற்றுக் கொண்ட பலருமே இதுவரை கைதாகியிருக்கிறார்களே தவிர யாருக்காக வவுனியாவில் பாஸ் நடைமுறை அமுல்படுத்தப்படுகிறதோ, யார் அதனைச் சட்ட விரோத நடவடிக்கைக்குப் பாவிக்கிறார்களோ அவர்கள் இதுவரை பெரியளவில் கைதானதாக ஆதாரங்கள் இல்லை.

இதேவேளை அப்படியான சிலர் பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்து பாஸ் வழங்கும் அதிகாரிகளையே கைக்குள் போட்டுக்கொண்டு காரியத்தைச் சாதித்து விடுகின்றனர். பிடிபடுவதெல்லாம் மலிவு விலையில் பெற்ற போலியான பாஸைக் கொண்டு அலையும் அப்பாவிகளே.

இதையெல்லாம் பார்க்கும் போது அண்மையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். வவுனியாவில் நடத்திய பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய அந்த இயக்கத்தின் செயலாளர் நாயகமாகிய சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டபடி ''வவுனியாவில் பாஸ் நடவடிக்கையானது பொலீஸாருக்கும், படையினருக்கும் ஒரு மேலதிக வருமானத்தைத் தரும் நடவடிக்கையே தவிர வேறொன்றுமில்லை' என்ற கூற்றில் உள்ள உண்மை புலப்படுகிறது.

மொத்தத்தில் இந்தப் பாஸ் நடவடிக்கையானது ஆரம்பிக்கப்பட்ட குறிக்கோளையும், இலக்கையும் விட மக்களுக்குத் தேவையில்லாத அலைச்சல்களையும் மேலும் பலருக்கு மேலதிக வருமானத்தையுமே ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறதே தவிர வேறெந்த உருப்படியான காரியத்தையும் செய்ததாக இல்லை. ★

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 08 10 — 1942

உதிர்வு 24 05 1998

**திருமதி நாகராஜா தவமணி**

திதி: 12 — 06 — 1999

ஆண்டொன்று சென்றாலும் - உங்கள்
ஓயாத நினைவலையால்
ஆறாத எம் மனங்கள் — தினம்
தவிப்பாய்த் தவிக்கின்றனவே.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்

கணவன், சகோதரர்கள்.
மருமக்கள், மச்சான்,

க. ஏகாம்பரம்,
இல. 2, புறூடி ஒழுங்கை,
அரியாலை.

(66546)

## கல்முனையில்...

(4 ஆம் பக்கத் தொடர்)

திருப்பார் என்று உண்மை நிலைமையைப் புட்டு வைத்தார் அமைச்சர் அலவி.

தரமுயர்த்தல் தொடர்பான உத்தியோகபூர்வ விழாப் பொதுக் கூட்டத்தில் அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் உரையாற்றுகையில்– தமது தந்தை இறந்து பத்து வருடங்கள் கடந்து விட்டதாகவும் தமது தந்தையின் இடத்தில் தாம் அமைச்சர் அலவி மௌலானாவை வைத்து கௌரவித்தும் நேசித்தும் வருவதாகவும் குறிப்பிட்டமை பலரையும் மெய்யுருக வைத்தது.

பல கோடி ரூபாக்கள் நிதி ஒதுக்கீட்டில் கல்முனையில் புதிய நகர அபிவிருத்தித் திட்டம் ஒன்று விரைவில் நடைமுறைப்படுத்தப்படவிருக்கும் தகவலையும் அமைச்சர் அஷ்ரப் இங்கு வெளியிட்டார்.

கல்முனையின் வரலாறு கூறும் ஊர்திகள் பவனி, ஊர்வலங்கள், இசைநிகழ்ச்சி என களைகட்டி நின்றது கல்முனை நகரசபையாக்கல் விழா.

சகல இன மக்களும் ஆயிரக்கணக்கில் ஒன்று திரண்ட மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றும் கல்முனை சந்தாஸ் கேணி மைதானத்தில் அன்றைய தினம் மாலை நடைபெற்றது.

மொத்தத்தில் நகரசபை அந்தஸ்து மூலம் கல்முனையின் புதிய வரலாறு எழுதப்பட்டுள்ளது. ★

## மக்கள் முகம்



யாழ். மாவட்டத்தில் 30 வருடங்களுக்கு மேல் அரசஎழுதுவினைஞராகப் பணி புரியும் பரமகுரு சந்திரா ஸ்ரீபதி யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் அண்மையில் யாழ். நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம்செய்தார்

யாழ். பிரதேச செயலகத்தில் எழுதுவினைஞராக தற்சமயம் பணிபுரியும் இவர், யாழ். மணிக்கூட்டு வீதி வண்ணை அரசடி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபையின் செயலாளராகவும் மற்றும் சமூக, சமய அமைப்புக்களிலும் பணிபுரிந்து வருகின்றார்.

இவர் யாழ். நாவலர் பாடசாலை, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவராவார். (3)

★ ★ ★

முத்து. இராதாகிருஷ்ணன் வடக்கு — கிழக்கு மாகாண கல்வி அமைச்சில் உதவிக் கல்விப் பணிப்பாளராக நியமனம் பெற்றுள்ளார்.

ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக சேவை தரம் III ஐ சேர்ந்த இவர் ஒரு புவியியல் பட்டதாரி. சிறந்த நாடகவியலாளர். ஓவியங்கள் வரைவதில் சிறந்த விற்பன்னர்.

சுபமங்களா, கணையாழி, தாமரை காலச்சுவடு போன்ற பல இந்திய, இலங்கை சஞ்சிகைகளில் இவரது பல ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

யாழ்ப்பாணம் சன்மார்க்க போதனா ஆங்கில பாடசாலையின் பழைய மாணவரான இராதாகிருஷ்ணன் சுன்னாகத்தில் பிரபல வர்த்தக நிறுவனமான ஏ.சி.எஸ். நிறுவன உரிமையாளர் ஏ. சி. எஸ். செல்லமுத்துக் குமாரு தம்பதிகளின் புத்திரனாவார். (152)

★ ★ ★

தனங்கிளப்பு அ. த. க. பாடசாலையின் அதிபர் க. ஏரம்பமூர்த்தி இளைப்பாறியதை அடுத்து சரசாலை சரஸ்வதி வித்தியாலய அதிபர் எஸ். திருநாவுக்கரசு இப்பாடசாலையின் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். சரசாலை சரஸ்வதி வித்தியாலய அதிபராக க. அரியதாஸ் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்— இவர் கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்தின் உப அதிபர் ஆக கடமையாற்றினார். (102)

★ ★ ★

கொழும்புத்துறை சென். ஜோசப் வித்தியாலயத்தில் உப அதிபராகவும் பின்னர் பதில் அதிபராகவும் பணிபுரிந்த எம். ஞானப்பிரகாசம் 28–05–99 ஆம் திகதி தொடக்கம் இவ்வித்தியாலயத்தின் நிரந்தர அதிபராக யாழ்.வலயக் கல்வித் திணைக்களத்தினால்நியமிக்கப்பட்டுள்ளார்.

★ ★ ★

விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலக உதவி விலை மதிப்பீட்டாளராகக் கடமையாற்றிய ச. தி. சண்முகநாதன் ஓய்வு பெற்றுள்ளார்.

இவரது இடத்திற்கு புதிய விலை மதிப்பீட்டாளராக மட்டக்களப்பிலிருந்து மாற்றலாகி வந்த பா. பாலேந்திரன் அண்மையில் நியமனம் பெற்றுள்ளார். (30)

★ ★ ★

தொல்புரம் கொட்டியம்பதி அருள்மிகு ஸ்ரீ ஆதிமுத்து மாரி அம்பாள் ஆலய பரிபாலன சபையினரும் வழிபடுவோரும் சேர்ந்து சமய சமூகப் பணிகளில் உழைத்து வரும் சமூகப் பணி சி. சி. வரதராசாவுக்கு ''சிவ ஞானச் செல்வர்'' என்ற பட்டமும் விருதும் வழங்கிக் கௌரவித்தனர்.

வடபிராந்திய இந்துப் பேரவையின் செயலாளராகப் பணிபுரியும் இவர் சமாதான நீதிவானுமாவார். இவர் பல சமய, சமூக அமைப்புகளில் பல பொறுப்பான பதவிகளை வகித்து வருகிறார். தொல்புரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியராவார்.

★ ★ ★

ஏழாலை நாக. சிதம்பரநாதனுக்கு நுவரெலியா மாவட்ட இந்து கலாசாரப் பேரவை ''ஆன்மீக அறிவொளி'' என்னும் பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தது. இவர் வட்டவளை ஆஞ்சநேயர் ஆலயத்தில் தொடராகச் சமயச் சொற்பொழிவாற்றி வந்தார்.

இவர் மலையகத்தில் நாவலப்பிட்டி மற்றும் பகுதிகளில் உள்ள ஆலயங்களில் ஆன்மீகச் சொற்பொழிவு ஆற்றி வருபவர். நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பிரதம குரு பிரம்மஸ்ரீ. சுவாமிநாத இராஜேந்திரக்குருக்கள். நீர்வைப் பண்டிதர் நீ. சீ. முருகேசு அவர்களிடமும் பயிற்சி பெற்று நீர்வேலிக் கந்தசுவாமி கோயில், அரசகேசரிப் பிள்ளையார் கோயில், ஆவரங்கால் சிவன் கோயில், உரும்பிராய் கற்பக விநாயகர் கோயில், சிதம்பர சுப்பிரமணியர் கோயில், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் ஆகிய இடங்களில் புராண படனங்களில் பங்கு கொண்டவர் இவர். 1996 ஆம் ஆண்டு நல்லையாதீன பரமாசாரிய சுவாமிகளால் பௌராணிகளுக்கான விருது வழங்கப்பட்டுக் கௌரவமும் ஆசியும் பெற்றார். ★


“முயற்சி”

**அகதிகள் புனர்வாழ்வு நிறுவன, திறன் விருத்தி மையம்**

**புதிய மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரல்**

கீழே குறிப்பிடப்படும் பயிற்சி நெறிக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பயிற்சி நெறி | கல்வித் தகைமை |
| --- | --- |
| 01. தட்டச்சு சுருக்கெழுத்து - தமிழ் [கிழமை நாள் வகுப்புகள்] | க. பொ. த [சா. த] சித்தி |
| 02. புத்தகம் கட்டுதல் [சனி, ஞாயிறு வகுப்புக்கள்] | க. பொ. த [சா. த] வரை கல்வி கற்றிருத்தல் |
| 03. நீர் இறைக்கும் இயந்திரம் திருத்துதல் [சனி, ஞாயிறு வகுப்புக்கள்] | க. பொ. த [சா. த] வரை கல்வி கற்றிருத்தல் |

பயிற்சி நெறிகளுக்கு கட்டணம் அறவிடப்பட மாட்டாது.

விண்ணப்ப முடிவு திகதி 18 – 06 – 1999

விண்ணப்பங்கள் யாவும் செயலாளர் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும்.

நிர்வாகம்,

1C6, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

[சி/7870]


## மக்கள் குடியிருக்கும்...

[5ஆம் பக்கத் தொடர்]

இது இவ்வாறிருக்க ராஸிக் குழுப் பொறுப்பாளரான ராஸிக் எனப்படும் எம். கணேசமூர்த்தி விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் 29 – 5 – 1999 இல் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் இடம்பெற்ற மறுநாள் (30 – 5 – 1999) திகதியிடப்பட்ட அறிக்கை பொன்று விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு — அம்பாறை மாவட்ட அரசியல் துறையினால் தமிழ் அமைப்புக்களின் அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ★

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் ஜெயசீலனின் தந்தையார்

**கந்தையா பரஞ்சோதி**

(சிலோன் ருபாக் கோ கொம்பனி லிமிட்.)

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பரி.யோவான் நண்பர்கள்.

[66580]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Baldness



விரைவில் நீங்கள்
வழுக்கையாகலாம்
சரியாக செயற்படாவிட்டால்
தற்போது எங்களால் முடியும்
இயற்கையாக
வழுக்கை ஏற்படுவதை தடுக்க

Start using Kölin Shampoo, conditioner and hair revitaliser

Check Manufacture and expire dates & this emblems on the cartoon

Available in Pharmacies and groceries Please ask your dealers
Tel · 01-237072/3. 0722-42518. 0722-53028. 077-344148

(சி/7822)


# போட்டிகள்

வலிகாமம் கல்விவலய பாடசாலைகளுக்கிடையிலான பிரிவுமட்டத்திலான ஆங்கிலதினப் போட்டிகள் இம்மாதம் 16 ஆம் திகதியில் இருந்து, 22 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

ஜூன் 16 ஆம், 17 ஆம் திகதிகளில் பிரிவு ஒன்றுக்கான போட்டிகள் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

பிரிவு இரண்டுக்கான போட்டிகள் 18 ஆம், 19 ஆம் திகதிகளில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் —

பிரிவு மூன்றுக்கான போட்டிகள் 21 ஆம், 22 ஆம் திகதிகளில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் — நடைபெறும். (ஐ–152)


## சுவைப்பிரியர்களே!

நாளை (14 – 06 – 99) முதல்
காலை உணவு, மதிய உணவு,
கோழி இறைச்சி, ஆட்டிறைச்சி, கிழங்குக் கறி, பருப்புக் கறி போன்றவற்றுடன் சுவைத்து மகிழ்ந்திடலாம்.

**அபீஸ் கோப்பி [B] பார்**
**&**
**கூல் ஸ்பொட்**

133, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
[66550] (பாரத் ஸ்ரூடியோ முன்பாக)

## விற்பனையாகிறது

ஒட்டுறோஸ், குறோட்டன், செவ்வரத்தை, மினி எக்சோறா, காடினியாஸ் மற்றும் பல பழமரக் கன்றுகள் விற்பனையாகின்றன.

**நியூ லங்கா பாம்**
கே. கே. எஸ் வீதி,
இணுவில்.
[66562]

மீண்டும்
அண்ணா கோப்பியை
உங்கள் முன்னிலையிலேயே
அரைத்துப் பெற்றுக்கொள்ள

## அண்ணா கோப்பிக் கடை

4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
(சி/7844)





## யா/இராமநாதன் கல்லூரி

பாடசாலை அபி. ச, பொதுக்கூட்டம்

## பிற்போடப்பட்டுள்ளது

14-06-1999 இல் நடைபெற இருந்த யா/இராமநாதன் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது. உரிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

– செயலாளர்

(சி/7873)

## VACANCY

The Jaffna Subdelegation of the International Committee of the Red Cross is looking for suitable candidates for the POST of HOUSEMAID.

Based in Jaffna
Permanent contract
Competitive Salary

REQUIREMENTS:

Hard working, dedicated and with a sense of initiative
Basic English conversational knowledge
Knowledge of cooking
Correct presentation & cleaning
Age 20 — 40

Please send curriculum Vitae within 1 week addressed to:

HEAD of SUB DELEGATION,
ICRC JAFFNA,
120, TEMPLE ROAD,
JAFFNA.

[66482]





(சி/7245)




## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

வெள்ளிவிழா நாளைய நிகழ்ச்சிகள்

## ஈழத்துக் கல்வி வளர்ச்சி

**1999 - 06 - 14 திங்கட்கிழமை**
மாலை 3 மணி

### நிகழ்ச்சி நிரல்

தமிழ் வாழ்த்து–
தொடக்கவுரை–
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர்)
வாழ்த்துரை–
பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர்
(தலைவர், இந்துநாகரிகத்துறை)

இயல் அரங்கு 3–30 -- 5–30

**'ஈழத்துக் கல்வி வளர்ச்சி'**

தலைவர்-
பேராசிரியர் வ. ஆறுமுகம்
(தலைவர், கல்வியியற்றுறை)

1) பேராசிரியர் க. சின்னத்தம்பி
'விஞ்ஞானக் கல்வி வளர்ச்சி'
2) கலாநிதி சபா. ஜெயராசா
'கலைத்திட்ட வளர்ச்சி'
3) கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை
'ஈழத்துக் கல்வி நிறுவன முகாமைத்துவம்'
4) திருமதி அ. சத்தியசீலன்
'வரலாற்று நோக்கில் இலங்கைக்கல்வி'

வருக, வருக என அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/7848)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

மிக முக்கியமான படங்கள் அடங்கிய நெக்கற்றிவ் இணுவிலுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து R. திலீபன், ஏழாலை தெற்கு, சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். [66548]

பொன்னுத்துரை துஷியந்தி 19, குளப்பிட்டி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரியுடைய விசேட அடையாள அட்டை [0902026658] நாச்சிமார் கோயிலுக்கும் குளப்பிட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். [66565]

ஆனந்தா வீதி, மானிப்பாயைச் சேர்ந்த சோமசுந்தரம் திவாகரன் என்பவரது அடையாள அட்டையும் (750904238V) விசேட அடையாள அட்டையும் பண்டத்தரிப்புக்கும் மானிப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தருமரூபன் பல்பொருள் வாணிப நிலையத்தில் ஒப்படைத்து உதவவும். [66532]

சுந்தரலிங்கம் சுதர்சினி ஆகிய எனது விசேட அடையாள அட்டை தட்டாதெருவுக்கும் வின்சர் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து பெரியதம்பிரான் கோயில் வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (66557)

நாவலடி உடுப்பிட்டியைச் சேர்ந்த கா. சின்னப்பு என்பவரின் முக்கிய ஆவணங்களும் சிறுதொகைப் பணமும் உடுப்பிட்டி நவிண்டில் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள், மேற்கண்ட முகவரியில் அல்லது நிமலேந்திரா திரையரங்கு, உடுப்பிட்டி என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (66558)

பாண்டிருப்பு திருவள்ளுவர் வீதி, கல்முனை 1 என்னும் முகவரியுடைய பாலகிருஷ்ணன் சச்சிதானந்தன் என்பவரது தேசிய அடையாள அட்டை [இல. 662603767V] 19 – 05 – 99 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பா. மூர்த்தி, முருகன் நகைமாடம், கைதடிச் சந்தி, கைதடி என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். [66559]

சிறில் மெல்கியூஸ் ஆகிய எனது விசேட அடையாள அட்டை (இல. 0901026702) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நியூ பிறைற் கல்வி நிலையம், மாட்டின் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். (66552)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் வஸ்தியாம் பிள்ளை சந்திக்கு அருகில் 3 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: சபாநாயகம், 33, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (66545)

## றபர் சீல்கள்

உறுதியான அழகிய றபர் சீல்களை [RUBBER STAMP] குறித்த தவணையில் விரும்பிய டிசைன் எழுத்துக்களில் செய்து பெற்றுக் கொள்வதற்கு: திருமால், 393, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (66399)

## விற்பனைக்கு

கரவைக் கிழாரின் 'தணியாத தாகம்' வரலாற்றுக் கற்பனை நாடகம் விற்பனையாகிறது. பதினேழாம் நூற்றாண்டில் டச்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்து மாந்தையின் மாண்பை நிலை நாட்டிய பனங்காம மன்னன் கயிலை வன்னியனின் வீர வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது இந்நூல். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (66488)

புதிய Super Drive NVSD 230, NVSD 235, Panasonic டெக்குகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சற்குணராஜன், 73, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். Tel.No- 2782. (66556)

குளிர்சாதனப் பெட்டிகள், (நஷனல் டபிள் டோர், சிசில் R 60, டீபிறீசர்) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 103, கோயில் வீதி, யாழ்ப்பாணம் (I.C.R.C அருகில்). [66526]

1 MD 90 மோட்டார் சைக்கிளும், 1 Sony டெக்கும் விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம்: ஞாயிறு 12.30 மணிக்குப் பின்பும், திங்கள், புதன்கிழமைகளில் 4 மணிக்கும். தொடர்பு: குமரன், இல. 64, 2 ஆம் குறுக்குத் தெரு, நல்லூர். [66570]

## திருமண சேவை

38 வயது செவ்வாய்க் குற்றமுள்ள ஆசிரியருக்கு தகுந்த மணப் பெண்ணும் செவ்வாய் தோஷமுள்ள B.sc மணமகளுக்கு பட்டதாரி மணமகனும் தேவை. விவரங்களுக்கு: இயக்குநர், விநாயகர் திருமண சேவை, 63, கல்லூரி வீதி, நீராவியடி என்னும்முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். [66544]

## புறோயிலர்

இறைச்சிக்கோழி புறோயிலர் (Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 15, 6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடைக்கு அருகில்) [66549]

## O/L MATHS

99 இல் புதிய பரீட்சையில் Distinction, Credit பெறுபேறடைய, இதுவரையும் பெறுபேறு அடையாதவரும் கற்பிக்கப்படுவர். நேரம் காலை, மாலை தினமும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (66530)

## ENGLISH / SINHALA

சகல தரங்களுக்கும் ஏற்ற வகுப்புக்கள் வழமை போல் நடைபெறுகின்றன. பிரத்தியேக வகுப்புக்களும் ஒழுங்கு செய்து கொள்ளலாம். T. Sagathevan B.A (Lond) 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (66514)

## இறைச்சிக்கோழி

புறோயிலர், கல்பேட்ஸ், சேவல் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு, தொடர்பு: இல. 31, மான் பாடசாலை வீதி, உடுவில் கன்னாகம், பொன்னாலை வீதி, விதானைவளவு, மானிப்பாய். [66286]

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் [பாதிக் கோழி உட்பட] தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். மிகவும் நுட்பமான நிறுவை. அத்துடன் அடை முட்டையும், வாழைக்குட்டிகளும் உண்டு. தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [66454]

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. சில்லறையாகவும் மொத்தமாகவும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். 1Kg 160/- தொடர்பு: இல. 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [66503]

## A/L கணக்கியல்

க. பொ. த. [உ. த] 2001 மாணவர்களுக்கான புதிய கணக்கியல் வகுப்புக்கள் ஆரம்பமாக உள்ளன. ஒவ்வொரு மாணவர் மீதும் தனிக்கவனம் செலுத்திக் கற்பிக்கப்படும். தொடர்பு: சி. ஞானசேகரம் B.Sc. (B.Ad) Dip. in. Edu. இல. 18, 6ஆவது ஒழுங்கை, பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். [66409]

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 03 — 01 — 1971

உதிர்வு 09 — 06 — 1994

**செல்வன் திருநாவுக்கரசு ரஞ்சன்**
[ ஜேர்மனி ]

திதி: 13 - 06 - 99

ஐந்து ஆண்டுகள் சென்றதடா ரஞ்சா
ஆறாது உன் நினைவு !
உன் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரர்கள், சகோதரிகள்,
மாமன்மார், மாமிமார், சித்தப்பாமார்,
சித்திமார், மைத்துனர்மார்,
மைத்துனிமார், மருமகன்

125, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம். ( 66567 )

## கண்ணீர் அஞ்சலி

சங்க அங்கத்தவர்
திரு. ஆ. சுந்தரராசா
அவர்களின் அன்புத் தந்தையார்

**கந்தையா ஆறுமுகம்**
(கிளாக்கர்)

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மசாந்திக்கும் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலக ஊழியர்கள்,
நலன்புரிச்சங்க அங்கத்தவர்கள்,

பிரதேச செயலகம்,
தென்மராட்சி,
சாவகச்சேரி. (சி/7777)

## நெஞ்சை விட்டகலாத 2-ம் ஆண்டு நினைவலைகள்



**திருமதி மரியம்மா பிறின்ஸ்**
(இளைப்பாறிய ஆசிரியை, யாழ். கன்னியர்மடம் மகா வித்.)

அருகில் இருத்தி அரவணைத்து
அன்பு மழையால் எமை நனைத்தாய்!
சருகாய்த் துன்பப் புயலிடையே
சிதற விடாமல் உறவு தந்தாய்!
உருகி அழுது இரண்டாண்டு
ஓடி மறைந்து விட்டதம்மா!
பெருகிச் சிந்தும் விழியருவி
பேசும் தாயே உன்நினைவை!

உங்கள் நினைவில் வாழும்
கணவன், பிள்ளைகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

23, சுவாட்ஸ் லேன்,
யாழ்ப்பாணம். [66467]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 08 — 02 — 1958

இறப்பு 25 — 05 — 1998

**திருமதி ரமணி பத்மநாதன்**
[சட்ட ஆலோசகர்,
மக்கள் வங்கி பிராந்திய பணிமனை, மட்டக்களப்பு
முன்னாள் உ.அ.அதிபர் முருகேசு தம்பிமுத்துவின் புதல்வி]

திதி: 12 - 06 - 1999

அன்பினிலே வாழ்ந்த ரமணி எம்
அகத்தினின்று மறையா ரமணி
அருளினிலே ஒலிக்கும் ரமணி என்றும்
அணையாது உன் ராகமணி.

ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கும்
தாய், சகோதர சகோதரிகள்,
மைத்துனர்கள், மருமக்கள்,

பொலிகண்டி. (66563)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லியடி மத்திய மகா வித்தியாலய
# பழைய மாணவர் சங்க
## ஆண்டுப் பொதுக் கூட்டம் - 1999

மேற்படி கூட்டம் சங்கத்தின் பதில் தலைவர் திரு. வே. வீரபத்திரபிள்ளை அவர்கள் தலைமையில் 27 – 6 - 99 ஞாயிறு மு. ப. 9. 30 மணிக்கு பாடசாலை (L) மண்டபத்தில் நடைபெற உள்ளது.

பழைய மாணவர்கள் அனைவரும் கூட்டத்துக்கு சமுகம் தந்து பாடசாலையின் வளர்ச்சிக்கு ஆக்கம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

சி .பிரபாகரன்,
செயலர்.

யா/நெல்லியடி ம. ம. வி.
கரவெட்டி.

(சி/7880)

# உரும்பிராய் லயன்ஸ் கழகத்தினரால்
நடத்தப்படும்
## இலவச மருத்துவ முகாம்
## வசதியற்ற பிள்ளைகளுக்கான மருத்துவ பரிசோதனை

காலம்: 13–06–99 ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி
இடம்: ஸ்ரீவசந்தநாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தின் ஆச்சிரமம்
கற்பகப்பிள்ளையார் கோயில் வடக்கு வீதி, உரும்பிராய்.

லயன் Dr, C. இந்திரராசா தலைமையில்
லயன் Dr. A. பார்த்திபன் மற்றும் Dr, ராகவன்
ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

1) இரத்த அழுத்தம்
2) வாய்ப்புற்று
3) மார்புச் சளி
4) நீரிழிவு
5) மார்புப்புற்று
6) இலவச மருந்து வழங்கல்

★ வசதியற்ற அநாதைப் பிள்ளைகளுக்கு அன்பளிப்புகளும் வழங்கப்படும்.

(66582) – தலைவர்

# கண்ணீர் அஞ்சலி

## துரைராசா தேவராஜா (தேவா)
தபால் ஊழியர் – அஞ்சலகம், சங்கானை

எமது அஞ்சலகத்தில் கடமையாற்றிய தபால் ஊழியரான து. தேவராஜாவின் திடீர் மறைவைக் கேட்டு அதிர்ச்சியடைகின்றோம். இவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தபால் அதிபரும், ஊழியர்களும்.
அஞ்சலகம், சங்கானை.

(66589)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன்
செல்வன் ப. ஜெயசீலன்
அவர்களின் அன்புத் தந்தையார்

## கந்தையா பரஞ்சோதி

அவர்களின் மறைவையிட்டுத் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடிசார் எந்திரவியல்,
98 ஆம் ஆண்டு மாணவர்.

தொழில்நுட்பக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(66583)

# கண்ணீர் அஞ்சலி

## மாணிக்கம் மகேந்திரராஜா
(ஓய்வுபெற்ற கணக்காளர், இ. போ. ச., யாழ்ப்பாணம்.)

எமது கல்லூரி ஆசிரியையான திருமதி த.மகேந்திரராஜா அவர்களின் கணவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்குபற்றுவதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
அலுவலக ஊழியர்கள்.
யா/இந்து மகளிர் கல்லூரி.

(66576)

# ஆசிரியருக்கான புத்தூக்க கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 13

யாழ். வலய கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் சைவ சமய, இசைப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புத்தூக்கக் கருத்தரங்குக்கான ஒன்றுகூடல் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை ஆதீன கலா மண்டபத்தில் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

ஆதீன பூசை வழிபாடு, திருமுறை ஓதுதல் ஆகியவற்றுடன் ஆரம்பமாகும். இந்த நிகழ்வில் திருஞானசம்பந்த பிள்ளை வரவேற்புரை நிகழ்த்துவார்.

இந்த கருத்தரங்கில் நல்லை திருஞானசம்பந்த ஆதீன குரு மகா சந்நிதான முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர், கிழக்குப் பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி வேலுப்பிள்ளை இராமகிருஷ்ணர் ஆகியோர் புத்தூக்கக் கருத்துரைகளை வழங்குவர்.

(இ–ரி)

# வீட்டிலிருந்து சென்றவர் குளத்தில் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 13

முதல்நாள் நண்பகல் 1. 00 மணிக்கு வீட்டைவிட்டு வெளியேறியவர் மறுநாள் காலை அப்பகுதிக் குளம் ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

இருபாலை கிழக்கில் நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் செல்லப்பா சுபாஸ்கரலிங்கம் (வயது 33) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்

நேற்றுக் காலை குளக்கட்டில் அவரது சைக்கிளும் ஷேர்ட்டும் காணப்பட்டதை அறிந்து அங்குசென்றுபார்த்த போது குளத்தினுள் அவர் சடலமாகக் கிடந்தது தெரிய வந்தது என இறந்தவரின் மனைவியால் தெரிவிக்கப்பட்டது.

சடலம் கோப்பாய் பொலீஸாரின் உதவியுடன் குளத்தில் இருந்து மீட்கப்பட்டு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது. (இ–15)

## போட்டி

கைதடி மேற்கு அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் இல்ல விளையாட்டுப் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்குப் பூங்கா மைதானத்தில் நடைபெறும்.

மழலைகள் கல்விப் பூங்கா தலைவர் திருமதி கனகலிங்கம் கலா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பனை அபிவிருத்திச் சபைப் பொது முகாமையாளர் சோ. கோகுலதாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-5)

# இதய அஞ்சலி

7—6—99 இல் காலமான
நடிகநாதமணி–அல்வாயூர்

## மு. செ. விவேகானந்தன்

அவர்களுக்கு குடும்ப உறவினர்களாகிய நாம் எமது இதய அஞ்சலியைச் செலுத்தி அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

ஆ. கதிரவேல் J.P. ச. ஸ்ரீதரன்,
க. பாக்கியராசா (மாலி), வே. க. தங்கவேல்.
அல்வாய்.

(66579)

# யாழ்ப்பாணம் மாநகர சபை
# மீள் கேள்வி அறிவித்தல்-1999

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள இறைச்சிக் கடைகளை 01–07–1999 ஆம் திகதி தொடக்கம் 31-12–1999 ஆம் திகதி வரையான 6 மாத காலப்பகுதிக்கு குத்தகைக்குக் கொடுப்பதற்கென அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபை ஆணையாளராகிய என்னால் 24–06–1999 ஆந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப் பிணைப் பணமும், கேள்விப் படிவக் கட்டணம் ரூபா. 250/–ம் செலுத்துவதன் பேரில் 23–06–1999 ஆந் திகதி புதன் கிழமை பிற்பகல் 3. 30 மணிவரையும் யாழ்ப்பாணம் மாநகரசபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான படிவங்களில் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்கள் யாழ்ப்பாணம் மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் ஆணையாளர், யாழ்ப்பாண மாநகரசபை எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு 24–06–1999 ஆம் திகதி வியாழக்கிழமை பி. ப. 12. 30 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "..............." கேள்விக்கான விண்ணப்பம் என எழுதப்படல் வேண்டும். தபாலில் அனுப்பப்படும்போது ஏற்படும் தாமதங்களுக்கு யாழ்ப்பாணம் மாநகரசபை எவ்விதத்திலும் பொறுப்பேற்க மாட்டாது. கேள்விகள் 24-06-1999 ஆந் திகதி பிற்பகல் 2. 30 மணிக்குத் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரால் அங்கீகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி எவரேனும் சமுகமளிக்க முடியும்.

அட்டவணை

| | இறைச்சிக் கடைகள் | கடை இல. | கேள்விப் பிணை | நிர்ணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| 1. | கொட்டடி ஆட்டிறைச்சிக் கடை | 02 | 2500/– | 7875/– | 112.50 |
| 2. | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | 01 | 2500/– | 37125/– | 195.00 |
| 3. | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | 03 | 2500/– | 35250/– | 195.00 |
| 4. | குருநகர் மாட்டிறைச்சிக் கடை | 06 | 2500/– | 3000 0/– | 195.00 |
| 5. | குருநகர் ஆட்டிறைச்சிக் கடை | 07 | 2500/– | 4500/– | 195.00 |
| 6. | பாசையூர் மாட்டிறைச்சிக் கடை | 03 | 2500/– | 19125/– | 135.00 |
| 7. | அரியாலை ஆட்டிறைச்சிக் கடை | | 2500/– | 7875/– | 135.00 |
| 8. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 02 | 2500/– | 4500/– | 200.00 |
| 9. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 06 | 2500/– | 2625/– | 200.00 |
| 10. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 07 | 2500/– | 4875/– | 200.00 |
| 11. | நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை | 08 | 2500/– | 1875/– | 200.00 |
| 12. | செங்குந்தா ஆட்டிறைச்சிக் கடை | 01 | 2500/– | 25000/– | 112.50 |

வே. பொ. பாலசிங்கம்.
மாநகர ஆணையாளர்,
மாநகரசபை, யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
11.6.99

(சி7871)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிட்டுப்பூங்கா புனரமைப்புக்கு முட்டுக்கட்டையிடுவது துரோகம்

## பிரதி முதல்வருக்கு புளொட் கடிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 13

நல்லூர்கிட்டுப்பூங்காவைப் புனரமைக்கும் முயற்சிக்கு முட்டுக் கட்டை போடுவது ஒரு வரலாற்றுத் துரோகம் ஆகும்.

புளொட் அமைப்பின் மாவட்டப் பொறுப்பாளரும் மாநகரசபைஉறுப்பினருமான செ. கிருபைராசா, யாழ். மாநகரசபை பிரதி மேயர் ந. ரவிராஜுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். மாநகரசபையின் 10 ஆம் திகதிய மாதாந்தக் கூட்டத்தில் நல்லூர் கிட்டு பூங்காவைப் புனரமைக்கும் முயற்சிக்கு முட்டுக்கட்டை போடப்பட்டதாக செய்தி வெளியாகியுள்ளது. இந்த நடவடிக்கை ஒரு வரலாற்றுத் துரோகம் என்பதை தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

யாழ். மாநகர சபையின் முதலாவது கூட்டத்தில் நான் கொண்டு வந்த 10பிரேரணைகளில் நல்லூர் கிட்டுப்பூங்கா, யாழ். சுப்பிரமணியம் பூங்கா ஆகியவற்றைப் புனரமைப்புச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளும் அடங்கியிருந்தன. இதுவரை இந்த கோரிக்கைகளைச்செயற்படுத்தும் உத்தரவுகள் வழங்கப்படவில்லை.

தந்தை செல்வா சதுக்கத்துக்கு அருகில் உள்ள துரையப்பா விளையாட்டரங்கின் பெயரை மாற்றம் செய்யக் கூடாது என்றால் சங்கிலி மன்னனின் சிலையருகே ஏன் கிட்டுப்பூங்கா இருக்கக் கூடாது.

நாம் மாநகரசபைக்கு உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படுவதற்கு முன்னரே இந்த இரண்டு பூங்காக்களையும் புனரமைக்குமாறு கேட்டிருந்தோம். அழித்தவர்களின் நிதியிலேயே அவைபுனரமைக்கப்பட வேண்டும் என்பதற்காகவே நாம் மாநகர சபையிடம் அவ்வாறு கோரியிருந்தோம்.

எமது இளைய சமூகத்தின் நன்மை கருதி இவற்றை புனரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம்.

எதிர்வரும் நல்லூர் உற்சவ காலத்துக்கு முன்னர் இந்த இரண்டு பூங்காக்களையும் புனரமைத்து மக்கள் பாவனைக்கு விடுவதற்கு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உத்தரவிடுமாறு தங்களைக் கோருகின்றோம்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-6-ரி)

## நூல் வெளியீட்டு விழா

மானிப்பாய் தெற்கு கிராம அலுவலர் இராசவல்லவன் இராசயோகன் எழுதிய ''சிந்தனை செய்மனமே'' (உருவகக் கதைகள்) நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மானிப்பாய் மகளிர் கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி வி. பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும். (இ-135-100)


BITSMANS

கல்வி நிறுவனம்

மானிப்பாய்

A/L 2000

பௌதிகவியல்

புலங்கள்

ஆசிரியர்:

திரு. ஜெயசீலன்

(B. Sc. Hons)

ஆரம்பம்: 14-06-99

திங்கள் மாலை 3.30.

(சி/7874)


## அனலைதீவில் மீன் சந்தை திறப்பு

அனலைதீவில் புதிய மீன் சந்தைக் கட்டடம் ஒன்று நேற்று திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஒதுக்கப்பட்ட இரண்டரை லட்சம் ரூபா செலவில் அனலைதீவு துறைமுகம் அருகில் இந்த மீன் சந்தைக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச சபைத் தலைவர் ந. மதனராசா தலைமையில் நேற்று நண்பகல் இடம்பெற்ற வைபவ ரீதியான ஒரு நிகழ்வில் சந்தைக் கட்டடம் திறந்துவைக்கப்பட்டது. (ஐ)

### ஆர்ப்பாட்டக்காரர்...

(முதலாம் பக்கத் தொடர்)

கொள்வதற்காக அவர் திறந்த ஜீப்பில்ஊர்வலமாகஅழைத்து வரப்பட்டார்.

அப்பொழுது அமைச்சருக்கு எதிர்ப்புத் தெரிவித்து கறுப்புக்கொடி காட்டுவதற்காக 500 க்கு மேற்பட்ட மக்கள் அங்குள்ள மைதானமொன்றில் காத்திருந்தனர்.

இந்த ஊர்வலம் குறிப்பிட்ட மைதானத்தை நெருங்கிக் கொண்டிருந்த பொழுது அங்கு கூடியிருந்தவர்கள் அமைச்சரின்கொடும்பாவியை எரித்தார்கள்.

அவர்கள் கறுப்புக் கொடிகளைக் காட்ட முற்பட்ட போது பொலீஸார் ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசியும் அங்கு கூடிநின்ற பொதுமக்களைக் கலைத்தனர்.

இதேவேளை அமைச்சரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் மர்சூக் அகமது லெப்பை நேற்று தனது ஆதரவாளர் சகிதம் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

இனப்பிரச்சினைத் தீர்வில் முஸ்லிம்களுக்கு தென் கிழக்கு மாகாணசபை அமைக்கப்பட வேண்டுமென்று அஷ்ரப் தெரிவித்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. (இ-21-5)

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா ஐயாத்துரை

புகையிரத வீதி, மல்லாகத்தைச் சேர்ந்த செல்லையா ஐயாத்துரை 12-06-99 இல் அகாலமரணமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக்கணவரும் குலேந்திரனின் அன்புத் தந்தையும் அராலியைச் சேர்ந்த சரஸ்வதியின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13-06-99) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஐ. குலேந்திரன்
(மகன்)

புகையிரத வீதி,
மல்லாகம்.

(66590)

### கா. சி. செல்லையா

(றோயல் டிஸ்பென்சறி — யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது கொழும்பில் வசித்தவருமான கா. சி. செல்லையா அவர்கள் நேற்று சனிக்கிழமை (12-06-99) அன்று காலமானார்.

அன்னார் கலாரத்ன ஞானமணியின் (பாரதி கலாமன்றம்) அன்புக் கணவரும், நந்தகுமாரின் (லண்டன்) பிரிய மிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று(13-06-99) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு பொரளையில் உள்ள ஏ. எவ். றேமன் மலர்ச்சாலையில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி செ. ஞானமணி
(மனைவி)

No. 6, பேர்லைன் வீதி,
தெகிவளை.
T. P. 717619

(சி/7884)


எமது

புதிய வீடியோ CD வெளியீடு

சாயிகுமார் — விஜயசாந்தி

ராம்கி

நடிக்கும்

★ தளபதி கோட்டை

★ கமிஷனர் பவானி

(CD வெளியீடு)

★ நிலவே முகம் காட்டு

(பிரமிட் CD)

வீடியோ விமல்

(இ/7883)


## பயிற்சி வகுப்பு

வலிகாமம் தெற்கு, ஜூன் 13

எதிர்வரும் ஜூலை மாதத்தில் நடைபெற உள்ள இலங்கை பாடசாலைகள் அதிபர்கள் தரங்களுக்கு ஆட், சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு பரீட்சகர்களை ஆயத்தம் செய்யும் நோக்குடன் வலிகாமம் கல்வி வலயத்தில் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இயங்கும் யூனியன் கல்லூரியில் தினமும் மாலை 4 மணி முதல் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

பாண்டித்தியம் பெற்ற பயிற்சியாளர்கள், கல்விமான்கள், பல்கலைக் கழக கல்வியாளர்கள், இளைப்பாறிய அதிபர்கள் என பலரும் இந்தப் பயிற்சி வகுப்புகளுக்கு வருகை தந்து தேவையான அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.

பயிற்சியில் கலந்துகொள்ளும் ஆசிரியர்களுக்கு அச்சடிக்கப்பட்ட குறிப்புக்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரனின் பொறுப்பில் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றுவருகின்றன.

(ஐ-152)

## திறப்பு விழா

விழிப்புலனற்றோர் சங்க தொழிற் பயிற்சி நிலைய திறப்பு விழா நாளை காலை 9-30 மணிக்கு கைதடியில் நடைபெறும்.

சாவகச்சேரி ஸ்கந்தவரோதய ம.வி. அதிபர் மு. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதனும் கௌரவ விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் கலந்துகொள்ளவுள்ளனர். (இ-5)

### செஞ்சிலுவைச்...

(முதலாம் பக்கத் தொடர்)

மறித்த இரகசியப் பொலீஸார் இவரைக் கைது செய்து அழைத்துச் சென்றனர் என தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே பொலீஸாரால் கைது செய்யப்பட்டுத் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுவரும் செஞ்சிலுவைச் சங்கத்தின் வடக்கு —கிழக்கு மாகாண இணைப்பாளர் சிவநாதன் கிஷோர் கைது செய்யப்பட்டதன் எதிரொலியாகவே இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-7--164-21)

### விடத்தல்தீவு...

(முதலாம் பக்கத் தொடர்)

யாளர் பிரிவுகளும் படையினரால் கைப்பற்றப் பட்டுள்ளதாக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கை நேற்றுக்காலை விடத்தல்தீவைக் கைப்பற்றிய பின்னர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை மூலம் மடுவிலிருந்து பாலம்பிட்டிக்கு புதியபாதை ஒன்றும் திறக்கப் பட்டுள்ளது என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் விடத்தல்தீவு கைப்பற்றப்பட்டதாக வெளிவந்த அறிவிப்பு குறித்து புலிகள் தரப்புத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை. (இ-5-7)

## அந்தணர் விழிப்புணர்வு கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 13

நியந்த்ரீயினால் நடத்தப்படும் அந்தணர்களுக்கிடையேயான விழிர்ப்புணர்வுக் கருத்தரங்கு தொடரின் மூன்றாவது நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கில் சுப்பிரமணிய பிரதிஷ்டா விதி என்னும் நூல் வெளியிடப்படவுள்ளது.

பேராசிரியர் கலாநிதி ப கோபாலகிருஷ்ண ஐயர் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை ப. சிவானந்த சர்மா நிகழ்த்த அறிமுக உரையை பா. சர்வேஸ்வரக் குருக்கள் நிகழ்த்துவார்.

### தொழிற் சங்கம்...

(முதலாம் பக்கம் பார்க்க)

சங்க நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாக அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர்கள் சங்கம் எச்சரிக்கை செய்துள்ளது.

சுகாதாரப் பணிப்பாளர்களை நியமிக்க மாகாண சபைகளுக்குள்ள அதிகாரங்களை மீளப் பெற்றுக் கொள்ளுமாறு அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்தக் கோரிக்கையை முன்வைத்து மேற்படி சங்கம் நேற்று அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டது.

இதே வேளை மருத்துவ உத்தியோகத்தர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவது சாத்தியமில்லை என்று சுகாதார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

தற்காக கடந்த வார இறுதியில் உயிலங்குளம் ஊடாக மன்னாருக்கு வந்தனர்.

பின்னர் மன்னார் நகரப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றின் உரிமையாளர் மூலமாக கொழும்பு செல்வதற்கான அனுமதிப் பத்திரத்தைப் பெற்றனர்.

மேற்படி அனுமதிப் பத்திரத்தை வழங்கிய போதே குறித்த சப்இன்ஸ்பெக்டர் தங்கச் சங்கிலியை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டார் என விசாரணைமூலம் தெரியவந்துள்ளதாக பிரதிப் பொலீஸ் மா அதிபர்களில் ஒருவரான ஸ்ரீ ஜெயவர்த்தன தெரிவித்தார். (இ-7)

### உயிலங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

வரையான பிரதேசத்தை இராணுவம் கைப்பற்றியுள்ளதையடுத்து அப்பகுதியில் அவசர நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள மன்னார் அரச செயலக அதிகாரிகள் தயார் நிலையிலிருக்குமாறு இராணுவத்தினர் கேட்டுள்ளனர்.

பூநகரிப் பிரதேசத்தை கைப்பற்றுவதற்காக கடந்த வியாழக்கிழமை முன்னேற முயன்ற படையினருக்கும்புலிகளுக்கும் இடையில் கடுமையான மோதல்கள் இடம் பெற்றவேளையிலேயே விடத்தல்தீவுவரையான இராணுவ முன்னேற்ற நடவடிக்கை இடம்பெற்றது என்று கூறப்படுகின்றது. (இ-5-7)

### செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்)

எனினும் பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு அவருடைய பெயர் விவரங்களை வெளியிடமுடியாதுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

செம்மணிப் புதைகுழி வழக்கை விசாரிப்பதற்காக விசேடமாக யாழ். மேலதிக நீதவானாக நியமிக்கப்பட்ட என். அருள் சாகரன் விடுமுறையில் லண்டன் சென்றிருப்பது தெரிந்ததே. (இ-7)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேற்[ லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361, ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-06-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org